# இயற்கை வேளாண்மையில் குழுச் சான்றிதழ்

*ஒரு பயிற்சி வழிகாட்டி*

CIKS

# இயற்கைவழி வேளாண்மைச் சான்றிதழ் பெற வேண்டிய அவசியம் என்ன?

தூய்மையான சுற்றுச்சூழலில் விளைவிக்கப்படும் ஆரோக்கியமான விளைபொருட்களையே நுகர்வோர் விரும்புகின்றனர்.

அவற்றை அதிக விலை கொடுத்து வாங்குவதற்கும் தயாராக உள்ளனர்.



நம்பிக்கை



விவசாயிகள் இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களைப் பின்பற்றி தரமான விளைபொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.

அவர்களால் அவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்ய முடியும்.

# சிறு விவசாயிக் குழுக்களுக்கு இயற்கைவழி வேளாண்மைச் சான்றிதழ் அளிப்பதற்கான நெறிமுறைகள்

ஒரு குழுவில் உள்ள அனைத்துச் சிறு விவசாயிகளும் இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களுக்கு உட்பட்டுச் செயல்படுகின்றனரா என்பதை ஒரு மையக் குழு கண்காணித்து உறுதிசெய்யும்.

ஒவ்வொரு குழுவும் தெளிவாக வகுக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமையைக் கடைப்பிடிக்கும்.




தனித்தனியே இல்லாமல், குழுவைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளுக்கும் சேர்த்து ஒரே சான்றிதழ் வழங்கப்படும்.

# அகக் கட்டுப்பாட்டு முறைமை
# - ஐஃபோம் விளக்கம்

அகக் கட்டுப்பாட்டு முறைமை என்பது இயற்கை வேளாண்மைத் தரத்தைப் பற்றிய உத்தரவாதத்தை அளிப்பதற்கான ஒரு ஏற்பாடு. சர்வதேசச் சான்றிதழ் வழங்கும் மையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு ஒன்று இயற்கை வேளாண்மைத் திட்டத்திலுள்ள விவசாயிகளின் வயல்களில் வருடாந்திர ஆய்வை மேற்கொள்ள இது வழிசெய்கிறது.

# சிறு விவசாயக் குழுவுக்குச் சான்று வழங்குதல்



# அகக் கட்டுப்பாட்டு முறைமை

**அகக் கட்டுப்பாட்டு முறைமை**

இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களைப் பின்பற்ற விவசாயிகளை ஊக்குவித்தல்.

- விவசாயிகளின் வயல்களில் ஆய்வை மேற்கொண்டு, அவர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- அங்கீகாரம் அளித்தல், தரநிர்ணயங்களை மீறும் செயல்பாடுகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல்.
- விவசாயிகள் மற்றும் விவசாயப் பண்ணை பற்றிய தகவல்களை ஆவணப்படுத்துதல்.
- விளைபொருட்களின் வரத்தைக் கண்காணித்தல்.









இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள்

# சிறு விவசாயிக் குழுக்களுக்குச் சான்றிதழ் வழங்குவதற்கான நிபந்தனைகள்

- சான்றிதழ் பெறுவதற்காகத் தனிநபர் செலுத்தும் கட்டணம் அவருக்குக் கிடைக்கும் லாபத்தைவிட அதிகமாக இருக்கும் என்பதால் குழுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.




- குழுவில் உள்ள விவசாயிகளிடையே (வயல் அமைந்துள்ள இடம், உழவியல் முறைகள், நிலப்பரப்பு போன்ற) சில பொதுவான பண்புகள் இருக்க வேண்டும்.

  பொதுவாக, உள்ளூர் சிறிய விவசாயிகள் மட்டுமே ஒரு குழுவாக இணைந்து சான்றிதழ் பெற முடியும். அதிக நிலப்பரப்பைக் கொண்ட பண்ணைகள் குழுவில் இணைவதாக இருந்தால் அவர்களுடைய வயல்களில் வருடாந்திர ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

- ஒரு குழுவில் உள்ள அனைவரும் பொதுவான ஒரு விற்பனை முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

# குறு விவசாயிகளுக்கான செயல்திட்டங்களின் வகைகள்






அகக் கட்டுப்பாட்டு முறைமைகளை விவசாயிகளின் கூட்டுறவு அல்லது சங்கங்கள் மூலம் செயல்படுத்துவது.

ஒப்பந்தமுறை உற்பத்தி

# சில முக்கியக் கலைச்சொற்கள்

**இயற்கைவழிப் பொருட்கள்** : இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களின்படி ஒரு புற அமைப்பினால் சான்றிதழ் வழங்கப்பட்டவை.

**ரசாயன முறை** : இயற்கை வேளாண்மைத் தரநிர்ணயங்களின்படி சாகுபடி செய்யப்படாதவை, வேளாண்மைச் சான்றிதழ் வழங்கப்படாத பொருட்கள்.

**அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவர்** : அகக் கட்டுப்பாட்டு முறைமையை நிர்வகிக்கும் மையம். பொதுவாக, இது ஒரு விவசாயக் குழுவாகவோ, விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும் ஒப்பந்த அமைப்பாகவோ இருக்கும்.

**அகக் கட்டுப்பாட்டு முறைமை கையேடு** : அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் சரியான முறையில் செயல்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களின் தொகுப்பு (படிவங்கள், கோப்புகள் போன்றவை).

# சில முக்கியக் கலைச்சொற்கள்

**தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத செயல்பாடுகள்** : பொதுவாக, இது இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத நிலைமைகளைக் குறிக்கும். (எ.கா.) இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களின்படி தடைசெய்யப்பட்ட ஒரு ரசாயனத்தைப் பயன்படுத்துதல்.

**தடைசெய்யப்பட்டவை** : தரநிர்ணயங்களின்படி தடைசெய்யப்பட்ட பொருட்கள்.

**அனுமதி** : இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்கள் மற்றும் செயல்முறைகளுக்கு உட்பட்டு ஒரு செயலுக்கு அகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் கீழ் அனுமதி வழங்குதல்

**சான்றளித்தல்** : இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்கள் மற்றும் விதிமுறைகளின்படி சர்வதேசச் சான்றிதழ் வழங்கும் மையத்தினால் சான்றளிக்கப்படுதல்.

# அகக் கட்டுப்பாட்டு முறைமைக் கையேடு

**அகக் கட்டுப்பாட்டு முறைமைக் கையேடு** : அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் சரியான முறையில் செயல்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களின் தொகுப்பு (படிவங்கள், கோப்புகள், ஒப்பந்தங்கள் போன்றவை).

ஐஃபோம் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள கையேடு இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இந்தக் கையேட்டில் தேவையான அனைத்துத் தகவல்களும் இருக்க வேண்டும். இது அகக் கட்டுப்பாட்டு முறைமையின் செயல்பாடுகளை உண்மையாகப் பிரதிபலிக்க வேண்டும். எனவே, மறுபரிசீலனைகளை முறையாக மேற்கொண்டு, கையேட்டில் செய்யப்படும் திருத்தங்களைப் பணியாளர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இந்த முறைமையைச் செயல்படுத்தும் அனைத்து நபர்களுக்கும் இந்தக் கையேட்டைக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

# நம்முடைய நோக்கம் என்ன?

அகக் கட்டுப்பாட்டு முறைமை என்பது இயற்கைவழி வேளாண்மையில் ஒரு முக்கிய கருவியாகச் செயல்படுகிறது. இதை கொண்டு இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்திற்கான விதிமுறைகளை மட்டும் நிர்ணயிக்காமல், பல்வேறு சமூகத்தினர் ஒன்றாக இணைந்து பணியாற்றி தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கொள்வதற்கான அடிப்படையாகவும் இதை பயன்படுத்திக் கொள்ளலாம்.



குழுவாகத் திட்டமிடுதல்

# இயற்கைவழி வேளாண்மைத் திட்டங்கள்

குறு விவசாயிகளுக்கான இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் பல்வேறு முறைகள் உள்ளன.

இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்தைக் கீழ்காணும் ஏதாவது ஒரு அமைப்பின் மூலம் செயல்படுத்தலாம்.

- இயற்கைவழி வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் / சாத்தியக் கூறுகளைக் கொண்ட விவசாயிகளின் குழு.
- அரசாங்கம் அல்லது தொண்டு நிறுவனம்
- ஒரு நிறுவனம் (எ.கா: ஏற்றுமதியாளர்)

# இயற்கைவழி வேளாண்மைத் திட்டங்கள்

**இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்தைக் கீழ்க்காணும் பகுதிகளில் செயல்படுத்தலாம்.**

- எங்கெல்லாம் விளைபொருட்கள் இயற்கைவழி வேளாண் முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றதோ மற்றும் எங்கெல்லாம் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்களை, இயற்கைவழி வேளாண் விளைபொருட்கள் என்று ஏற்றுமதி சந்தையில் விற்பனை செய்வதற்கான நல்ல வாய்ப்புகள் உள்ளதோ அங்கெல்லாம் இயற்கை வேளாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்தலாம்.

- எங்கெல்லாம் ரசாயன முறை வேளாண்மையைத் தற்சார்பு முறை வேளாண்மையாக மாற்றும் முயற்சிகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்தலாம்.




# இயற்கைவழி வேளாண்மைத் திட்டங்களைத் திட்டமிடுவதற்கான குறிப்புகள்

- திட்டங்கள் தற்சார்புடையவையாக இருக்க வேண்டியது அவசியமானதாகும்.
- திட்டம் முடிவடையும்போது (எ.கா: நிதியுதவி முடிவடையும் நிலையில்) விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் திட்டத்தின் தொடக்கத்தில் இருந்ததை விட அதிகரித்து இருக்க வேண்டும்.
- விவசாயிகள் இயற்கை விவசாய திட்டங்கள் அல்லது இதை போன்ற வேறு திட்டங்களுக்குப் பொறுப்பாளர்களாக இருக்க வேண்டும்.
- இயற்கைவழி வேளாண்மை விளைபொருட்களின் உற்பத்தியும், விற்பனையும் சமநிலையில் இருக்க வேண்டும்.

# குறு விவசாயிகளுக்கான இயற்கை வேளாண்மைச் செயல்திட்டங்களின் வகைகள்




அ) அகக் கட்டுப்பாட்டு முறைமையை விவசாயிகளின் கூட்டுறவு அல்லது சங்கங்கள் மூலம் செயல்படுத்துவது.




ஆ) ஒப்பந்த முறை உற்பத்தி

# செயல்திட்டத்தை வடிவமைப்பதற்கான வழிமுறைகள்

**அ) இயற்கைவழி வேளாண்மைச் சான்றிதழ் பெற்ற விவசாயிகளின் கூட்டுறவு அல்லது சங்கத்தின் பெயரில் அகக்கட்டுப்பாட்டு முறைமைச் செயல்படுத்தப்படுகின்றது.**



# செயல்திட்டத்தை வடிவமைப்பதற்கான வழிமுறைகள்

**ஆ) கம்பெனி விளைபொருட்களைப் பக்குவப்படுத்துபவர் / தொண்டு நிறுவனம் பெயரில் சான்றிதழ் உள்ளது.**

அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துதல், விவசாயிகளுக்குத் தேவையான சாகுபடி நுட்பங்களை அளித்தல், அவர்களுடைய வயல்களில் அக ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் விளைபொருட்களைச் சேமித்தல், பக்குவப்படுத்துதல், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லுதல் போன்ற எல்லா நிலைகளையும் கண்காணித்தல்.

விவசாயிகள் ஒரு குழுவாக ஒன்று சேர்ந்து ஒப்பந்த முறையில் அவர்களுடைய விளைபொருட்களைக் கம்பெனிக்கு விற்பனை செய்தல்.

# விவசாயி சங்கங்கள்

| பலம் (+) | பலவீனம் (−) |
|---|---|
| ▪ விவசாயிகள் மிகுந்த ஆர்வம் உடையவர்களாகவும், சுயமாகச் செயல்படுபவர்களாகவும் இருப்பார்கள்.<br><br>▪ சமூகக் கட்டுப்பாடும் பொறுப் புணர்வும் இருக்கும்.<br><br>▪ ஏற்கெனவே செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு அமைப்பாகவும் இருக்கும். | ▪ விற்பனையில் அனுபவம் இல்லாமல் இருக்கலாம்.<br><br>▪ திட்டங்களை நிர்வகிப்பதில் அனுபவம் இல்லாமல் இருக்கலாம்.<br><br>▪ புதிய அமைப்பாக இருக்கலாம். அவ்வாறு இருந்தால், அவற்றின் முறைமையைச் செயல்படுத்துவதற்குச் சிறிது காலம் பிடிக்கும் |

# தொண்டு நிறுவனங்கள் ஒருங்கிணைக்கும் விவசாயிகள்

## பலம் (+)

- திட்டங்களை முறைப்படுத்துவதில் நல்ல அனுபவம் இருக்கும்.
- நிதியுதவிகளைப் பெறுவதற்கான வசதிகள் இருக்கும்.
- வளர்ச்சி நிதிகளைக் கொண்டு இயற்கைப் பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்யத் தேவையான தொடர்புகள் இருக்கும்.
- விவசாயிகளின் நலனில் தொண்டு நிறுவனத்திற்கு அக்கறை இருக்கும், தொண்டுநிறுவனத்திற்கு எந்த விதத் தனிப்பட்ட லாபமும் இருக்காது.

## பலவீனம் (−)

- விற்பனையில் அனுபவம் இல்லாமல் இருக்கலாம்.
- விவசாயிகளுக்கு இது தங்கள் திட்டம் என்ற எண்ணம் இல்லாமல் இருக்கலாம். இதன் காரணமாக அவர்களிடையே பொறுப்புணர்வு குறைவாக இருக்கலாம்.
- விவசாயிகளிடையே தாங்கள் ஒரு குழுவில் இருப்பவர்கள் என்ற எண்ணம் இல்லாமல் இருக்கலாம். அவர்கள் அவரவர் நலனில் மட்டுமே அக்கறை கொண்டு செயல்படலாம்.

# பக்குவப்படுத்துபவரும் ஒப்பந்த முறை உற்பத்தியும்

| பலம் (+) | பலவீனம் (−) |
| --- | --- |
| ▪ விற்பனையில் நல்ல அனுபவம் இருக்கும்.<br>▪ சந்தைகளில் விற்பனை செய்வதற்கான தொடர்புகள் இருக்கும்.<br>▪ பொருட்களின் தரத்திற்கான உத்திரவாதம் அளிப்பதில் அனுபவம் இருக்கும்.<br>▪ வியாபாரத்திற்குத் தேவையான நிதி உதவியைப் பெறுவதற்கான வசதிகள் கூடுதலாக இருக்கும். | ▪ விவசாயிகளுக்கு இது தங்கள் திட்டம் என்ற எண்ணம் இல்லாமல் இருக்கலாம். இதன் காரணமாக அவர்களுக்குப் பொறுப்புணர்வு குறைவாக இருக்கலாம்.<br>▪ ஒப்பந்ததாரர் அதிக லாபத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கலாம். அதனால் லாபத்தை விவசாயிகளுடன் பங்கிட்டுக்கொள்ளாமல் போகலாம்.<br>▪ விவசாயிகள் ஒப்பந்ததாரரைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்படலாம். அதனால் அவர்களுக்கு உரிய மரியாதை கிடைக்காமல் போகலாம். |

# திட்டமிடுதல்

திட்டத்தைத் தொடங்குவதற்கு முன், திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு போதுமான நிதியுதவி உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.



- திட்டத்தில் ஈடுப்பட்டுள்ள ஒவ்வொருவரும் திட்டத்தின் மூலம் நடத்தப்படும் இயற்கைவழி வேளாண்மைப் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகளில் பங்கேற்பதை உறுதிப்படுத்த வேண்டும். விவசாயிகளிடையே ரசாயன இடுபொருட்களைப் பரவச் செய்யும் மையங்களையும் (இவை அரசாங்கத்தின் வேளாண் விரிவாக்க பணியில் ஈடுப்பட்டுள்ள குழுவாகவும் இருக்கலாம்) இந்தக் கருத்தரங்குகளில் கலந்து கொள்ள செய்ய வேண்டும்.

# திட்டமிடுதல்

**திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்,**



- திட்டத்தின் மூலம் விவசாயிகள் எதைச் செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறார்களோ அவற்றை அவர்களுக்குத் தெளிவாகப் புரிய வைக்க வேண்டும்.
- திட்டத்தின் விவரங்களை நேரடியாகவோ அல்லது மொழி பெயர்ப்பாளரைக் கொண்டோ விவசாயிகளுக்கு அவர்களுடைய சொந்த மொழியிலேயே தெரிவிக்க வேண்டும்.
- அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவரால் உருவாக்கப்பட்ட அகக் கட்டுப்பாட்டு முறைமையை ஆவணப்படுத்தும் முறையில் நாம் தேர்ந்தெடுத்த சான்றளிக்கும் நிறுவனத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

# அகக் கட்டுப்பாட்டு முறைமைக் கையேடு : பண்ணை, விளைபொருட்களைக் கொள்முதல் செய்தல், பக்குவப்படுத்துதல் போன்றவற்றின் ஒட்டுமொத்தத் தகவல்கள்

அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவர் தன்னுடைய நிறுவனத்தைப் பற்றியும், பதிவுசெய்யப்பட்ட பண்ணைகளைப் பற்றியும், விளைபொருட்களைக் கையாளும் முறைகள் பற்றியும் கையேட்டில் தெளிவாகக் கொடுக்க வேண்டும்.



**பண்ணைகளைப் பற்றிய ஒட்டுமொத்தத் தகவல்கள்**

- பண்ணைகள் பொதுவாக எவ்வளவு பரப்பைக் கொண்டிருக்கும்.
- மிக பெரிய, மிக சிறிய பண்ணைகளைப் பற்றிய தகவல்கள்.
- அனைவரும் ஒரே வகைப் பயிரைச் சாகுபடி செய்கிறார்களா?
- அந்தப் பகுதியில் பொதுவாகக் காணப்படும் உற்பத்தி முறைகள்.

**கொள்முதல் மற்றும் கையாளுதல் : ஒட்டுமொத்தத் தகவல்கள்**


- கொள்முதல் மையங்கள்.
- ஏற்றுமதி வரை விளைபொருட்களின் வரத்து.

# அகக் கட்டுப்பாட்டு முறைமைக் கையேடு : அகக் கட்டுப்பாட்டு முறைமையின் அமைப்பு (திட்ட ஒருங்கிணைப்பு)

அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவர் தன் நிறுவனத்தின் நிர்வாக வரைபடத்தைத் தயாரிக்க வேண்டும். இந்த வரைபடம் கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

**அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்தும் நிறுவனத்தின் உட்பிரிவுகள் (அலுவலகப் பணியாளர்கள், களப் பணியாளர்கள்).**

- பதவிகளின் படிநிலை (மேலாளர், கள அலுவலர்).
- இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் வகிக்கும் பதவிகள் (பதவிகளின் பெயர்).
- இந்த வரைபடத்திலோ அல்லது தனிப்பட்டியலிலோ கள ஆலோசகர்கள், குழுவிலுள்ள ஆய்வாளர்கள், கொள்முதல் பணியாளர்கள் பற்றிய தகவல்கள்.



# பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளைக் கையாளுதல்

- இயற்கைவழி வேளாண்மைப் பொருட்களின் தரத்தைப் பாதிக்கும் எல்லா நடவடிக்கைகளையும் அகக் கட்டுப்பாட்டு முறைமை கவனத்தில் எடுத்துக்கொண்டு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுக்க வேண்டும்.

- திட்டத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பை ஆரம்பத்திலேயே மதிப்பிட வேண்டும்.

- பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலைகளைக் குறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.



# எந்த நிலையிலும் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு

- **உற்பத்தி :** (எ.கா) விளைபொருட்களுக்கு அதிக விலை கிடைக்கிறது என்பதாலேயே உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயிகள் ரசாயனங்களைப் பயன்படுத்தக்கூடும். அரசாங்கம் ரசாயனங்களை இலவசமாக விநியோகிக்கிறது என்பதாலேயே விவசாயிகள் அவற்றை வாங்கிப் பயன்படுத்தக்கூடும்.

- **விற்பனை / கொள்முதல் :** (எ.கா) கொள்முதல் சமயத்தில் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுடன் தங்கள் குடும்பத்தினர் உற்பத்தி செய்த விளைபொருட்களையும் கலந்து விற்பனை செய்யக்கூடும். இதனால் சான்று பெறாத விவசாயிகளிடமிருந்தும் விளைபொருட்களை வாங்கும் நிலை ஏற்படக்கூடும்.



**எந்த நிலையிலும் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.**

- **கையாளுதல்** : (எ.கா) வெவ்வேறு முறைகளில் உற்பத்திசெய்யப்பட்ட விளைபொருட்களை ஒன்றாகக் கலந்து விற்பனை செய்யக்கூடும். பொருட்களைச் சேமித்து வைக்கும்போதும், இடமாற்றம் செய்யும்போதும், ஏற்றுமதி செய்யும்போதும் கலப்படம் நிகழலாம்.

- **அகக் கட்டுப்பாட்டு முறைமையில் உள்ள குறைகள்** : (எ.கா) அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்தும் பணியாளர்கள் அவ்வப்போது மாறுவதால், பணியாளர்களுக்குப் போதுமான பயிற்சி இல்லாமல் போகலாம், குழுவுக்குள் முறையான அக ஆய்வு மேற்கொள்ளப்படாமல் இருக்கலாம்.

அகக் கட்டுப்பாட்டு முறைமையை ஒருங்கிணைப்பவர் அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தாலும், திட்டத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளைப் பற்றி எல்லாச் சமயங்களிலும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

# ஏற்படக்கூடிய பாதிப்பு : விவசாயி மற்ற விவசாயிகளின் விளைபொருட்களை விற்பனை செய்தல்

**ஏற்படக்கூடிய பாதிப்பு :** விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களுடன் பிற விவசாயிகளின் விளைபொருட்களையும் கலந்து விற்பனை செய்துவிடலாம்.

**இதைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், சரிசெய்யும் நடவடிக்கைகளும்**

- விவசாயிகளின் குடும்பத்தினரையும், அண்டை விவசாயிகளையும் திட்டத்தில் சேர்த்துக்கொண்டு விடுவது.



## ஏற்படக்கூடிய பாதிப்பு : விவசாயி மற்ற விவசாயிகளின் விளைபொருட்களை விற்பனை செய்தல்

- மகசூலை மதிப்பிடத் திறமையான முறையை மேற்கொள்ள வேண்டும். கொள்முதல் செய்வதற்கு முன்பு ஒரு முறை பண்ணையின் மகசூலை மதிப்பிட வேண்டும். விளைபொருட்களை வாங்கும்போது, அவற்றின் அளவு ஏற்கனவே மதிப்பிடப்பட்ட அளவுக்கு மிகாமல் இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.
- திட்டத்தில் தடைசெய்யப்பட்ட செயல்களைப் பற்றியும், திட்டத்தின் செயல்பாட்டைப் பாதிக்கும் செயல்களைப் பற்றியும் விவசாயிகளுக்கு ஆரம்பத்திலேயே அறிவுறுத்த வேண்டும்.
- கள அலுவலர்களின் முன்னிலையில் அறுவடை செய்த விளைபொருட்களை மட்டுமே வாங்க வேண்டும்.

## ஏற்படக்கூடிய பாதிப்பு : விவசாயிகள் ஒரே பட்டத்தில் ஒரே பயிரை இயற்கை முறையிலும், ரசாயன முறையிலும் சாகுபடி செய்வது (இணை உற்பத்தி)

**ஏற்படக்கூடிய பாதிப்பு :** திட்டத்தில் உள்ள ஒரு விவசாயி இயற்கை முறையில் மிளகு பயிர் செய்கிறார். அவர் ரசாயன முறையில் ஒரு தென்னந்தோப்பையும் நிர்வகித்து வருகிறார். ஆனால் இதைப் பற்றி அகக் கட்டுப்பாட்டு முறைமைக்குத் தெரியப்படுத்தவில்லை.

**பிரச்சினை :** இயற்கை முறையில் மிளகு பயிர்செய்யும் அதே சமயத்தில் தென்னந்தோப்பில் ஊடுபயிராகவும், மிளகு பயிர்செய்கிறார். இந்த நிலையில், அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவருக்கு விளைபொருட்களை விற்பனை செய்யும்போது இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகையும், ரசாயன முறையில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகையும் ஒன்றாகக் கலந்து விற்பனை செய்துவிடும் ஆபத்து உள்ளது.

**இதைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், சரிசெய்யும் நடவடிக்கைகளும்**

- ஒரு விவசாயியால் பயிர் செய்யப்படும் அனைத்து நிலங்களையும் கண்காணிக்க வேண்டும் (முறைமைகளின்படி இதை அவசியம் மேற்கொள்ள வேண்டும்)
- **சில வழிகள்** : எல்லாப் பயிர்களையும் இயற்கை முறையில் உற்பத்திசெய்யும் விவசாயிகளை மட்டுமே திட்டத்தில் பதிவுசெய்யலாம்.
- ஒரே சமயத்தில் இயற்கை முறையிலும், ரசாயன முறையிலும் ஒரு பயிர் சாகுபடி செய்யப்பட்டால், அந்த விளைபொருளுக்கு இயற்கைவழி வேளாண்மைச் சான்று அளிக்கக் கூடாது. மேலும், அந்தப் பொருட்களை இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்டவை என்று விற்பனை செய்யக் கூடாது.
- விவசாயிகள் ரசாயன வயல்களையும் இயற்கை முறைக்கு மாற்ற வேண்டும். விளைபொருட்களைக் கொள்முதல் செய்யும்போது இயற்கை வயல்களின் விளைபொருட்களையும், மாற்றுக் காலத்தில் உள்ள வயல்களின் விளைபொருட்களையும் ஒன்றாகக் கலந்துவிடாமல் கள அலுவலர்கள் கவனிக்க வேண்டும்.

## பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளைத் தொடர்ந்து கண்காணித்து, அவற்றுக்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- எல்லா இயற்கைவழி வேளாண்மைத் திட்டங்களிலும் பிரச்சினைகள் உண்டு. இவற்றில், சில பிரச்சினைகள் அடிக்கடி நிகழக்கூடியவையாகவும், அதிகப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவையாகவும் சில பிரச்சினைகள் எப்போதாவது நிகழக்கூடியவையாகவும், சமாளிக்கக்கூடிய வகையிலும் இருக்கும்.
- பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்குத் தேவையான எல்லாவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும், அவை அரிதாக நடைபெறக்கூடியதாக இருந்தாலும், எல்லாவிதமான பிரச்சினைகளைப் பற்றியும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.




- பிரச்சினைகள் காலத்திற்கு ஏற்ப மாறுபடும். எனவே, அவ்வப்போது பிரச்சினைகளைப் பற்றிய ஆய்வை மேற்கொள்வது நல்லது.
- சூழ்நிலை மாற்றங்களுக்கும், செயல்முறைகளில் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கும் ஏற்ப முறைமையை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். இதைச் செய்ய, எந்தெந்தக் கட்டங்களில் நடவடிக்கை தேவைப்படும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.


# அரசாங்கங்களின் இயற்கைவழி வேளாண் கட்டுப்பாடுகள்



விதிமுறை 2092 / 91



யூ.எஸ்.டி.ஏ. தேசிய இயற்கைவழி
வேளாண்மைத் திட்டம்
(National Organic Program (NOP)



ஜே.ஏ.எஸ். இயற்கைவழி
வேளாண் தரநிர்ணயம்

இந்தச் சந்தைகளில், ஒரு பொருளை இயற்கைவழி வேளாண் விளைபொருள் என்று விற்பனை செய்ய வேண்டுமானால், அவை இயற்கைவழி வேளாண்மைத் தர நிர்ணயங்களின்படி சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

# சான்றளிக்கும் தனியார் நிறுவனங்களின் இயற்கைவழி வேளாண்மை முத்திரைகள்

- இயற்கைவழி வேளாண் விளைபொருட்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்வதற்கு முத்திரைகளும், சான்றிதழ்களும் வழிசெய்கின்றன.
- இவை அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் பக்குவப்படுத்துபவர்களால் மட்டுமே உபயோகிக்கப்படும் வகையில் பாதுகாக்கப்பட்டுள்ளன.
- இயற்கைவழி வேளாண் விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கும் இவை உதவுகின்றன.

organic products.

# இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்கள் எதற்கு?

- அரசு விதிமுறைகளும், தனியார் இயற்கைத் தரநிர்ணயங்களும் பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளின் வேளாண்மை முறைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளதால், அவற்றை விவசாயிகளாலும் களப்பணியாளர்களாலும் எளிதில் படித்துப் புரிந்துகொள்ள முடிவதில்லை. மேலும், அவற்றில் கொடுக்கப்பட்டுள்ள எல்லா அம்சங்களும் எல்லா இடங்களுக்கும், சூழல்களுக்கும் பொருந்துவதாக இருப்பதில்லை.
- ஒவ்வொரு ஆய்வுத் திட்டமும் வெவ்வேறு இயற்கை மற்றும் ரசாயன தரநிர்ணயங்களின்படி சான்று அளிக்கப்படுவதையே விரும்புகின்றன.
- அகக் கட்டுப்பாட்டு முறைமையைப் பின்பற்றும் ஒவ்வொரு திட்டமும், அதற்குப் பொருத்தமான இயற்கைத் தரநிர்ணயங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். மேலும், அந்தத் திட்டம் அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தரநிர்ணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா முக்கிய அம்சங்களையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, திட்டம் செயல்படுத்தப்படும் இடத்திற்குத் தகுந்த உற்பத்தி விதிமுறைகளை உருவாக்க/குறிப்பிட வேண்டும்.
- நாம் பின்பற்றும் சர்வதேச தரநிர்ணயங்களைவிட நாம் உருவாக்கும் இயற்கை வேளாண்மைத் தரநிர்ணயங்கள் விரிவாகவும் / கறாராகவும் இருக்கலாம். ஆனால் குறைவாக இருக்கக் கூடாது.

# இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களில் இருக்க வேண்டிய குறைந்தபட்சத் தகவல்கள்

- நாம் அடிப்படையாகக் கொண்டு செயல்படும் சர்வதேச இயற்கைவழி வேளாண்மை விதிமுறைகளில் உற்பத்தி முறைகள் வலியுறுத்தப் பட்டிருக்கும் பட்சத்தில், அவை நம் செயல்பாடுகளுக்குப் பொருந்துவதாக இருந்தால், அவற்றைப் பற்றியும் இயற்கைவழி வேளாண் அகத் தரநிர்ணயங்களில் விவரிக்க வேண்டும்.

- அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்தும் பணியாளர்கள் அனைவருக்கும் புரியும் வகையில் இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களை உருவாக்க வேண்டும்.

- திட்டத்தில் உள்ள விவசாயிகள் தரநிர்ணயங்களைச் செயல்படுத்த, அவர்கள் குறைந்தபட்சம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும்.

# இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களில் குறைந்தபட்சம் இருக்க வேண்டியவை

**இயற்கைவழி வேளாண்மை அகத் தரநிர்ணயங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.**

- திட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளின் உற்பத்தி முறைகளைப் பற்றியும் தெளிவாகக் கொடுக்க வேண்டும். மேலும், திட்டத்திலுள்ள சில விவசாயிகள் தங்கள் நிலங்களின் ஒரு பகுதியை மட்டும் இயற்கை முறையில் சாகுபடிசெய்வதாக இருந்தால், அதனால் ஏற்படும் பிரச்சினைகளை எவ்வாறு சமாளிப்பது? (எ.கா) விவசாயி ரசாயன முறையில் உற்பத்திசெய்த பொருட்களை இயற்கை விளைபொருட்களுடன் சேர்த்து சேமிக்கும் நிலை ஏற்படலாம். இதை எவ்வாறு சமாளிப்பது போன்றவை.
- திட்டத்திலுள்ள எல்லா விவசாயிகளுக்குமான உற்பத்தி விதிமுறைகள். (எ.கா) விதைகள், உரமிடுதல், தற்சார்பு முறையில் மண்வள மேம்பாடு, பயிர் பாதுகாப்பு, இயற்கை வேளாண்மையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள பொருட்கள், ரசாயனங்களின் கசிவைத் தடுக்கும் முறைகள், கால்நடைப் பராமரிப்பு போன்றவை.
- அறுவடை மற்றும் அறுவடைக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகள்.
- ரசாயன சாகுபடியிலிருந்து இயற்கை வேளாண்மைக்கு மாறுவதற்கான கால இடைவெளி மற்றும் திட்டத்தில் புதிதாகச் சேர்ந்த விவசாயிகளின் தேவைகள்.

# இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களில் சேர்க்கப்பட வேண்டிய அடிப்படைகள்








**தற்சார்பு முறையில் மண்வள மேம்பாடு**

- பசுந்தாள் உரம்,
- மூடாக்கு முறை
- மக்கு உரம் (சருகுகள், கால்நடைக் கழிவுகள்)
- கனிம உரங்களைக் குறைந்த அளவில் பயன்படுத்துதல்
- ரசாயன உரங்களைப் பயன்படுத்தக்கூடாது (எ.கா) யூரியா

**பயிர் பாதுகாப்பு மற்றும் இயற்கை விதைகள்**

- சரியான சாகுபடி முறைகள், உழவியல் முறைகளை மேற்கொள்வதன் மூலம் இயற்கை எதிரிகளை வயல்களில் தக்கவைத்துப் பூச்சி, நோய் மற்றும் களைகளைக் கட்டுப்படுத்துவது.
- தாவரக் கரைசல்களைக் குறைந்த அளவில் மட்டுமே பயன்படுத்துவது.
- ரசாயனப் பூச்சிமருந்துகளைப் பயன்படுத்தக் கூடாது.
- இயன்றவரை இயற்கை விதைகளை அல்லது இயற்கை முறையில் வளர்க்கப்பட்ட நாற்றுகளை / பதியன்களைப் பயன்படுத்த வேண்டும். இயலாத சமயங்களில் மட்டுமே, ரசாயன முறையில் உற்பத்திசெய்யப்பட்ட விதைகளைப் பயன்படுத்த வேண்டும்.
- மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளையும் தாவரங்களையும் பயன்படுத்தக் கூடாது.

**கால்நடைப் பராமரிப்பு**

- கால்நடைகளை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்.
- இயன்றவரை இயற்கைத் தீவனங்களையே பயன்படுத்த வேண்டும். மருந்துகளைக் குறைந்த அளவில் மட்டுமே பயன்படுத்த வேண்டும்

# இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன?

இயற்கைவழி வேளாண்மைச் சான்று அளிப்பதற்கான தரநிர்ணயங்களில் நமது திட்டத்திற்குப் பொருந்துபவற்றைத் தேர்ந்தெடுப்பது

↓

திட்டம் மேற்கொள்ளப்படும் இடத்தின் சூழலை அறிந்துகொள்வது

↓

தரநிர்ணயங்களில் நமது திட்டத்திற்குப் பொருத்தமானவை எவை?
தரநிர்ணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தவிர வேறு ஏதேனும் சேர்க்கப்பட வேண்டுமா?
தற்சார்பு இயற்கைவழி வேளாண் முறைக்கு எந்த மாதிரியான நிர்வாக முறையை மேற்கொள்ள வேண்டும்?
நமது இயற்கைவழி உற்பத்தி முறையில் உள்ள முக்கியமான அம்சங்களைத் தொகுப்பது

இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களின் முன்வரைவு

↓

அனுமதிக்கான செயல்முறைகள்

தரநிர்ணயங்களுக்கான தேவைகள் யாவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா?
இவற்றை விவசாயிகளும் களப்பணியாளர்களும் எளிதாகப் புரிந்துக்கொண்டு செயல்பட முடியுமா?

ஒப்புதல் அளிக்கப்பட்ட இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்கள்

# இயற்கைவழி வேளாண் அகத் தரநிர்ணயங்கள்

**எ.கா: தோட்டப்பயிர் வளர்ப்பில் வாசனைத் திரவியங்கள்**

- பண்ணை முழுவதற்கும் சான்றளிக்கப்பட்டுள்ளது. எனவே விதிமுறைகள் எல்லாப் பயிர்களுக்கும், எல்லா வயல்களுக்கும் பொருந்தும்.
- விவசாயி தன் பண்ணை முழுவதையும் (எல்லாப் பயிர்களையும்) இயற்கை முறைக்கு மாற்ற வேண்டும். அதாவது, பண்ணையின் எந்தப் பகுதியிலும் ரசாயன உரங்களையோ, பூச்சிக்கொல்லிகளையோ, களைக்கொல்லிகளையோ பயன்படுத்த அனுமதி இல்லை.



# இயற்கைவழி வேளாண் அகத் தரநிர்ணயங்கள் (தொடர்ச்சி....)

- ஒருவேளை விவசாயிக்கு ரசாயன வயல் இருந்தால், அதில் நெல் மற்றும் தேயிலை சாகுபடி மட்டுமே செய்ய அனுமதி உண்டு. அந்த வயல் தனியாக வேறு பகுதியில் இருக்க வேண்டும். அந்த வயலை வரைபடத்தில் தெளிவாகக் குறிக்க வேண்டும். விவசாயி இயற்கைச் சாகுபடிக்கும், ரசாயனச் சாகுபடிக்கும் தொடர்ந்து அந்தந்த வயல்களையே பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு பட்டத்திற்கும் அவற்றை மாற்றக்கூடாது. மேலும், ரசாயன வயல்களிலிருந்து இயற்கை வயலுக்கு எந்தவித ரசாயனக் கசிவும் ஏற்படாமல் இருக்க, அனைத்து விதத் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

- அக ஆய்வாளரிடமிருந்து அனுமதி பெற்ற பொருட்களைத் தவிர, வெளியிலிருந்து வாங்கும் எந்த இடுபொருட்களையும் (உரங்கள், பூச்சிக்கொல்லிகள் களைக்கொல்லிகள், பூஞ்சாணக்கொல்லிகள்) பயன்படுத்த விவசாயிக்கு அனுமதி இல்லை. (இந்தப் பொருட்களைப் பயன்படுத்த அக ஆய்வாளர் அகக் கட்டுப்பாட்டு மேலாளரிடமிருந்து அனுமதியும், இந்தப் பொருட்களின் பட்டியலையும் பெற்றிருக்க வேண்டும்.) இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தலாம். ஆனால் பயன்படுத்தும் முன் அதைப் பற்றி அகக் கட்டுப்பாட்டு முறைமைக்குத் தெரியப்படுத்த வேண்டும். மேலும் இயற்கை இடுபொருட்கள் எந்தவிதத்தில் பயன்படுத்தப்பட்டன என்பதைப் பதிவேட்டில் குறிக்க வேண்டும்.

# இயற்கைவழி வேளாண் அகத் தரநிர்ணயங்கள் (தொடர்ச்சி....)

- மண்ணரிப்பைத் தடுத்து, மண்வளத்தை மேம்படுத்துவதற்குத் தகுந்த சாகுபடி முறைகளை (மூடாக்கு முறை, பசுந்தாள் உரம் போன்றவை) விவசாயிகள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.
- இயற்கை முறையில் சாகுபடிசெய்யப்பட்ட விதைகளையும், நாற்றுகளையும் மட்டுமே பயன்படுத்த வேண்டும். இது முடியாத சமயத்தில், பயன்படுத்தும் விதைகளிலும் நாற்றுகளிலும் எந்தவித மரபணு மாற்றங்களும் செய்யப்படவில்லை என்பதையும், அவற்றில் எந்தவிதமான ரசாயனங்களும் பயன்படுத்தப்படவில்லை என்பதையும் உறுதிசெய்ய வேண்டும்.
- அனுமதிக்கப்படாத எந்தவிதப் பொருட்களையும் விவசாயி வயலில் சேமித்து வைக்கக் கூடாது.
- மிளகு, கிராம்பு போன்ற பொருட்களைக் காயவைக்கும்போது, அவை சான்று பெறாத பொருட்களுடன் கலந்துவிடாமல் இருக்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- திட்டத்தில் புதிதாகச் சேரும் விவசாயிகளிடம் அனுமதிக்கப்படாத பொருட்களை அவர்கள் கடைசியாக எப்போது பயன்படுத்தினார்கள் என்பது குறித்து விசாரிக்க வேண்டும். அவர்கள் கடைசியாக ரசாயனங்களைப் பயன்படுத்திய தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்தை மாற்றுக்காலமாக (ரசாயன முறையிலிருந்து இயற்கை முறைக்கு மாறுவதற்கான கால இடைவெளி) அனுசரிக்க வேண்டும்.

# இயற்கைவழி வேளாண் விதிமுறைகளின் நோக்கம்

- இயற்கைவழிப் பயிர் உற்பத்தி செய்யத் தேவைப்படுபவை → இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்கள்
- கால்நடை உற்பத்திக்குத் தேவைப்படுபவை
- முகப்புச் சீட்டுக்குத் தேவைப்படுபவை
- கண்காணிப்புக்குத் தேவைப்படுபவை → அகக் கட்டுப்பாட்டு முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ளவை
- பொருட்களை இறக்குமதி செய்வதற்கான ஆயத்த முறைகள்

# புதிதாக விவசாயிகளைச் சேர்க்கும்போது :

- அவர்களைச் சந்தித்து, அவர்களுடைய கடமைகளை விளக்க வேண்டும்.
- அவர்களுடைய வயல்களைப் பார்வையிட வேண்டும்.
- பண்ணையைச் சேர்த்துக்கொள்வதற்கான நுழைவுப் படிவத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும்.
- வரைபடத்தைத் தயாரிக்க வேண்டும்.
- ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும்.



**விவசாயிகளுடன் கள அலுவலர் கலந்துரையாடல்**

---



**அகக் கட்டுப்பாட்டு அலுவலகத்தில் அகக் கட்டுப்பாட்டு மேலாளர்**

- ஆவணங்களைச் சரிபார்த்தல்.
- ரசாயன முறையிலிருந்து இயற்கை முறைக்கு மாறுவதற்கான கால இடைவெளியை நிர்ணயித்தல்.
- விவசாயிகளின் பெயர் பட்டியலில் புதிய விவசாயிகளின் பெயர்களைச் சேர்த்தல்.
- வயல் அமைந்துள்ள பகுதியின் ஒட்டுமொத்த வரைபடத்தைத் தயாரித்தல்.
- ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல்.

# விவசாயிகளின் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை

## குறைந்தபட்சத் தேவைகள்

**இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்களைப் பற்றிய விவரங்கள்**

- இயற்கைவழி வேளாண்மையில் விவசாயிகள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்
- விளைபொருட்களைப் பண்ணையிலேயே விற்பனைக்கு ஏற்றவையாக ஆக்குவதற்கான (பக்குவப்படுத்துவதற்கான) விதிமுறைகள், விளைபொருட்களை விற்பனை மையங்களுக்குக் கொண்டுவருவதற்கான விதிமுறைகள்

**ஒழுங்கு நடவடிக்கைகள்**

- தரநிர்ணயங்களை மீறிச் செயல்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

**பண்ணையை ஆய்வு செய்ய அனுமதி**

- அக மற்றும் புற ஆய்வாளர்கள் விவசாயிகளின் பண்ணைகள் மற்றும் அவை தொடர்பான ஆவணங்களைப் பரிசோதிக்க வரும்போது, விவசாயிகள் அவர்களுக்கு அனுமதி தந்து ஒத்துழைக்க வேண்டும்.
- ஒப்பந்தம் அந்த ஊரில் பேசப்படும் மொழியில் இருக்க வேண்டும்.

**திட்டங்களைப் பொறுத்துச் சேர்த்துக்கொள்ளக் கூடியவை**

**விவசாயிகளின் இதர கடமைகள்**

(எ. கா.)

- தங்களுடைய சொந்த விளைபொருட்களை மட்டுமே விற்பனைசெய்ய வேண்டும்.
- விவசாயிகள் அகக் கட்டுப்பாட்டு அலுவலரைத் தவிர மற்ற வியாபாரிகளிடம் தங்கள் விளைபொருட்களை இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்டவை என்று சொல்லி விற்கக்கூடாது.
- விவசாயிகள் விளைபொருட்களின் தரத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

**அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவரின் இதர கடமைகள்**


(எ. கா.)

- குறிப்பிட்ட பட்டத்தில் விவசாயிகள் உற்பத்திசெய்யும் பொருட்களில் எந்த அளவு கொள்முதல் செய்யப்போகிறார் என்பதை முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்.
- இலவசப் பயிற்சிகளை விவசாயிகளுக்கு அளிக்க வேண்டும்.
- விவசாயிகளிடமிருந்து வாங்கும் இயற்கைவழி விளைபொருட்களுக்கு நியாயமான விலையைக் கொடுக்க வேண்டும்.

**ஒப்பந்தத்தை ரத்துசெய்வது எப்படி?**

- ஒப்பந்தத்தை ரத்துசெய்யும் முறை குறித்து அந்தந்தத் திட்டத்திலுள்ள அலுவலரும் விவசாயிகளும் கலந்தாலோசித்து முடிவுசெய்ய வேண்டும்.

# பண்ணைக்கான நுழைவுப் படிவம்


Annex: II Farm Entrance Form


**பண்ணையின் நுழைவுப் படிவம் அல்லது அடிப்படைத் தகவல்களைச் சேகரிப்பதற்கான வினாப் படிவம்.**

- விவசாயியின் கட்டுப்பாட்டில் இருக்கும் மொத்த நிலப்பரப்பு.
- பணப்பயிர்கள் பயிர்செய்யப்பட்டுள்ள நிலங்கள் மட்டும் அன்றி வீட்டு உபயோகத்திற்காகப் பயிர் செய்யப்பட்டுள்ள சிறு நிலங்களையும் பதிவுசெய்ய வேண்டும்.
- எவ்வளவு இடத்தில் (பரப்பில்) இயற்கைமுறையில் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றன (அ) மரங்களின் எண்ணிக்கை
- சாகுபடி முறைகள்
- கடைசியாக எப்போது ரசாயனங்கள் பயன்படுத்தப் பட்டன என்பதை ஒவ்வொரு வயலிலும் குறித்து வைக்க வேண்டும்.

# ஒப்பந்தமும் வரைபடமும்


**பண்ணை அமைந்துள்ள பகுதியின் ஒட்டுமொத்த வரைபடம்**

- ஒரு கிராமத்தில் உள்ள பண்ணைகளின் ஒட்டுமொத்த வரைபடத்தைத் தயார்செய்ய வேண்டும்.
- அந்த வரைபடத்தில் ஒவ்வொரு பண்ணையும் அமைந்திருக்கும் இடத்தைக் குறியீட்டு எண்ணுடன் குறிக்க வேண்டும்.
- தனித்தனி வயல்களின் வடிவங்களையும் குறிக்க வேண்டும்.
- இயற்கை வேளாண்மைச் சான்றளிக்கப்படாத விவசாயிகளின் நிலங்களையும், அவை அதிகமாக இல்லாத பட்சத்தில், குறிப்பிடலாம்.
- அந்தப் பகுதியில் உள்ள முக்கியமான அடையாளங்களை வரைபடத்தில் குறிக்க வேண்டும்.
- வரைபடம் தயாரிக்கப்பட்ட தேதியை வரைபடத்தில் குறிப்பிட வேண்டும்.



# பண்ணையின் வரைபடம்

ஒரு வயலில் ஒவ்வொரு ஆண்டும் பயிர்சுழற்சி மேற்கொள்ளப்பட்டால் அல்லது ஒரு விவசாயி ரசாயன முறையிலும் சாகுபடி செய்பவராக இருந்தால் அத்தகைய வயல்களுக்கு வரைபடத்தைத் தயாரிக்க வேண்டும்.



- அந்த வரைபடத்தில் விவசாயியின் வயல்கள் தெளிவாகத் தெரியும்படி காண்பிக்க வேண்டும்.
- பயிரிடப்பட்ட வருடம், பயிர் மற்றும் இதர விவரங்களைக் குறிப்பதற்கும் இந்த வரைபடத்தைப் பயன்படுத்தலாம்.
- அந்தப் பண்ணையில் உள்ள ரசாயன வயல்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- அருகில் உள்ள ரசாயன வயல்களிலிருந்து ரசாயனங்கள் இயற்கை வயலுக்குள் கசியும் அபாயமிருந்தால் அதையும் வரைபடத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- முக்கியமான அடையாளங்களைக் குறிக்க வேண்டும்.
- வரைபடம் தயாரிக்கப்பட்ட தேதியை வரைபடத்தில் குறிப்பிட வேண்டும்.

# அக ஆய்வுகள்

அகக் கட்டுப்பாட்டு முறைமையில் அக ஆய்வு மிக முக்கியமான அம்சமாகும். இயற்கை வேளாண் தரநிர்ணயங்களையும், விதிமுறைகளையும் விவசாயிகள் பின்பற்றுகிறார்களா என்பதை உறுதிசெய்துகொள்ள அக ஆய்வுகள் அவசியம்.

அகக் கட்டுப்பாட்டு முறைமையினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லா விவசாயிகளிடமும் ஆண்டுதோறும் (100%) கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும்.

சாகுபடி சமயத்தில் தரநிர்ணயங்களைக் கடைபிடிக்காத நிலைமைகள் உருவாகும் அபாயமுள்ள முக்கியமான கட்டங்களில் அக ஆய்வை அவசியம் மேற்கொள்ள வேண்டும்



# ஆய்வுகளை எவ்வாறு மேற்கொள்வது?


**அகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒருங்கிணைப்பாளர்**

- அக ஆய்வாளரை நியமிப்பார்.
- விவசாயிகளைக் குறித்த கவனிப்புப் பட்டியலையும் அதன் தொடர்பான விவரங்களையும் ஆய்வாளருக்கு வழங்குவார்.
- அக ஆய்வாளருக்குப் பண்ணையின் தற்போதைய தகவல்கள் அடங்கிய கோப்புகளையும், பண்ணையின் இதர ஆவணங்களையும், கள ஆலோசகர்களின் கருத்துகளையும் தருவார்.
- கடந்த வருடத்தின் கொள்முதல் பற்றிய விவரங்களை அக ஆய்வாளருக்குத் தருவார்.

**அக ஆய்வாளர்**

- ஒருங்கிணைப்பாளரால் வழங்கப்பட்ட ஆவணங்களைப் படித்துப்பார்த்து, சந்தேகங்களைக் கள ஆலோசகரிடம் கேட்டுத் தெளிவு பெறுவார்.
- கள ஆய்வுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்.
- ஆய்வுக்குத் தேவையான கவனிப்புப் பட்டியல், பேனா, கால்குலேட்டர், புகைப்படங்கள், வரைபடம், நோட்டுப் புத்தகங்களைக் கொண்டுசெல்ல ஏற்பாடுசெய்வார்.

# எதை ஆய்வு செய்ய வேண்டும்?




ஆய்வின்போது விவசாயியையோ அவர் பிரதிநிதியையோ நேர்கண்டு பெறப்பட்ட தகவல்களையும், அகக் கட்டுப்பாட்டு முறைமையால் வழங்கப்பட்ட தகவல்களையும் ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும்.

# அக ஆய்வு – ஓர் மாதிரி

**விவசாயியின் இயற்கைவழி பருத்தி வயலில் மேற்கொள்ளப்பட்ட அக ஆய்வு. (ஆய்வின் போது விவசாயி ஆய்வாளருடன் இருக்க வேண்டும்)**

விவசாயியின் வீட்டைச் சுற்றி இருக்கக்கூடிய பருத்தி மற்றும் வாழை வயல்களையும், ரசாயனங்கள் காற்றின் மூலம் பரவுவதற்கான வாய்ப்புகள் உள்ளதா என்பதை கண்டறிய வயல்களின் வரப்புகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.

விவசாயியின் பதிவேடு, கள அலுவலரின் குறிப்புகள், கடந்த வருடத்தின் கொள்முதல் பட்டியல் போன்றவைகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.

சேமிப்புக் கிடங்கு மற்றும் இடுபொருட்கள் மற்றும் பண்ணை கருவிகளை (தெளிப்பான் உட்பட) வைத்திருக்கும் அறையை ஆய்வு செய்ய வேண்டும்.

கிராமத்தின் இயற்கைவழி வாழை நாற்றங்காலையும் ஆய்வு செய்ய வேண்டும்.



விவசாயியால் ரசாயன முறையில் பயிரிடப்பட்டுள்ள மக்காசோள வயல்களைப் (விவசாயியின் வீட்டிலிருந்து ஐந்து நிமிடம் நடக்கும் தொலைவிலுள்ள) ஆய்வு செய்ய வேண்டும்.


பருத்தியில் விதைகளை அகற்ற பயன்படுத்தப்படும் கருவிகளையும், விதைகளைக் காய வைக்கும் இடங்களையும் ஆய்வு செய்ய வேண்டும்.

பண்ணையிலுள்ள மாடுகள், கோழிகள் பண்ணையில் சுதந்திரமாக திரிகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும்.

பண்ணையின் நீர் ஆதாரம் மாசுப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதா என்பதையும், வயல்களில் குப்பைகள் இருக்கிறதா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

பண்ணைக்கு அருகில் இருப்பவர்கள் மற்றும் கிராமத்தினரிடம் வேண்டிய விவரங்களை விசாரித்து அறிய வேண்டும்.

# பண்ணை ஆய்வுக்கான கவனிப்புப் பட்டியல்



Organic Export project.

Annex VII: Internal Inspection Form

| | | | |
|---|---|---|---|
| Village Name | | Parish Name: | |
| Name of Farmer | | Code Number | |

| | | | |
|---|---|---|---|
| No of Pineapple Stems | | Yield Estimate No Fruits | |
| No of Banana Stems | | Yield estimate (No Bunches) | |
| No of Passion fruit vines | | Yield estimate (Kgs) | |
| No of vanilla vines | | Yield estimate (kgs green) | |
| No of ginger plants | | Yield Estimate (kgs) | |

General Information — Comments

| | | | | |
|---|---|---|---|---|
| Contract | Yes | | No | |
| Chemical Usage | Yes | | No | |
| Use of treated seed | Yes | | No | |
| Mulching | Good | Fair | Poor | |
| Weeding | Good | Fair | Poor | |
| Manure | Good | Fair | Poor | |
| Pruning | Good | Fair | Poor | |
| Trees Saved | Good | Fair | Poor | |
| Erosion Control | Good | Fair | Poor | |
| Inter-cropping | Good | Fair | Poor | |
| Crop Rotations | Good | Fair | Poor | |

Crop Information

| | | | | |
|---|---|---|---|---|
| Harvesting | Good | Fair | Poor | |
| Cleaning | Good | Fair | Poor | |
| Products Storage | Good | Fair | Poor | |

Animals

| | | | | |
|---|---|---|---|---|
| Chickens | Good | Fair | Poor | |
| Goats | Good | Fair | Poor | |
| Cattle | Good | Fair | Poor | |
| Other | Good | Fair | Poor | |

Fields Visited

| | | | | |
|---|---|---|---|---|
| | Good | Fair | Poor | |
| | Good | Fair | Poor | |
| | Good | Fair | Poor | |


Advice Given To Farmer

| | |
|---|---|
| Follow up | Compliance with previous advice given ? Good, Fair, Poor, None |
| Subject 1 | |
| Subject 2 | |
| Subject 3 | |

If Farmer has violated data report to Field Supervisor made

I the responsible field officer confirm that the information given in this report is correct and complete

Date Signature:



# தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத நிலைமைகளில் செயல்படுதல்

**விவசாயிகள் தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத சமயத்தில் செயல்படுவதற்கான வழிகள்**

- பிரச்சினைகளை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்துதல் – ஆவணங்களின் மூலமோ அல்லது பண்ணைக்கு அழைத்துச்சென்றோ.
- விவசாயி தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத நிலைமையில், குறிப்பிட்ட அந்த நிலைமை குறித்து தர நிர்ணயங்களில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதை விவசாயியை விளக்கச் சொல்லுதல்.



# தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத நிலைமைகளில் செயல்படுதல்

- விவசாயிகளுக்கு அகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றியும் தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத நிலைமையில் எந்த மாதிரியான ஒழுங்கு நடவடிக்கை ஒரு விவசாயியின் மீது எடுக்கப்படும் என்பதையும் விளக்க வேண்டும்.
- ஒழுங்கு நடவடிக்கைகளில் அடுத்த கட்டமாக என்ன செய்யப்படும் என்பதையும் அப்போது எடுக்கப்படும் முடிவு பற்றி அவருக்கு எப்போது தெரிவிக்கப்படும் என்பதையும் விவசாயிக்குத் தெரிவிக்க வேண்டும்.
- விவசாயியின் தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத செயல்பாடுகள், திட்டத்திலுள்ள மற்ற விவசாயிகளையும் பாதிக்கலாம். எனவே, அவர்களையும் விவாதங்களில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டும்.



# ஆய்வில் உள்ள பல்வேறு கட்டங்களைப் பற்றிய சுருக்கம்

- முதலில் ஆய்வின் வழிமுறைகளை விவசாயிகளுக்கு விளக்க வேண்டும். ஆய்வு தொடர்பான ஆவணங்களையும், படிவங்களையும் அவர்களுக்குக் காண்பிக்க வேண்டும்.
- கூடுமானவரை விவசாயியின் அடையாள அட்டையையும், ஒப்பந்தப் படிவத்தையும் சரிபார்க்க வேண்டும்.
- இயற்கைவழி வேளாண் தரநிர்ணயங்களின் நகல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தால் அதைக் கேளுங்கள். இல்லையென்றால், உங்களிடம் உள்ள பிரதியை அவர்களுக்குக் காண்பித்து, தரநிர்ணயங்களைப் பற்றி அவர்கள் எந்த அளவுக்குத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கேட்டறியுங்கள்.
- களங்களையும், நாற்றங்காலையும் பார்வையிட வேண்டும். ரசாயனக் கசிவு ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள வயல்களின் எல்லைகளையும் பார்வையிட வேண்டும். தடைசெய்யப்பட்ட இடுபொருட்கள் ஏதாவது பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனமாகப் பார்க்க வேண்டும். நோய்கள் மற்றும் பூச்சி தாக்குதல் காணப்பட்டால், அதைப் பற்றியும், அதற்காக மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு முறைகள் பற்றியும் கேட்டறிய வேண்டும். மேலும், இயற்கைவழி வேளாண்மைத் தரநிர்ணயங்கள் அனைத்தும் சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிய வேண்டும்.

# ஆய்வில் உள்ள பல்வேறு கட்டங்களைப் பற்றிய சுருக்கம்

விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும் இடத்தையும் (கருவிகள், இடுபொருட்கள், விளைபொருட்கள் முதலியவற்றுக்கான) சேமிப்பு அறைகளையும் பார்வையிட வேண்டும்.

- பண்ணையின் ஆவணங்களை ஆய்வுசெய்து, அவற்றை அகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஆவணங்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும்.
- ஆய்வின் முடிவுகளை விவசாயிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். திட்டத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப் பற்றியும், அவற்றைச் சரிசெய்ய மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகளைப் பற்றியும் எடுத்துக்கூற வேண்டும். மேலும், பண்ணையை மேம்படுத்த அறிவுரைகளையும் வழங்கலாம்.
- சரிபார்க்கப்பட்ட படிவத்தில் விவசாயியும் ஆய்வாளரும் கையெழுத்திட வேண்டும்.



# ஆய்வைச் சிறப்பான முறையில் மேற்கொள்ளச் சில குறிப்புகள்

- ஆம் / இல்லை என்று பதில் வரக்கூடிய கேள்விகளைக் கேட்கக் கூடாது.
- ஏற்றுமதிக்கான பயிர்களைப் பாதிக்கக்கூடிய நோய்களைப் பற்றியும் பூச்சிகளைப் பற்றியும், அவற்றுக்காக அந்தப் பகுதி மக்கள் பொதுவாக மேற்கொள்ளும் கட்டுப்பாட்டு முறைகள் (எ:கா : அரசு விரிவாக்கப் பணியாளர்களினால் பரிந்துரை செய்யப்பட்ட முறைகள்) பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும்.
- ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தியதற்கான அடையாளங்களைக் கண்டறியும் முறையைத் தெரிந்துகொள்ள வேண்டும்.
- குழுவில் உள்ள பிற விவசாயிகளையும் ஆய்வில் பங்குபெறச்செய்ய வேண்டும்.
- அண்டை விவசாயிகளிடமும் அருகிலுள்ள மக்களிடமும் கலந்துபேச வேண்டும்.



# ஆய்வைச் சிறப்பான முறையில் மேற்கொள்ளச் சில குறிப்புகள்

- மேலும், விவசாயியின் மனைவியுடனும் பண்ணையில் வேலை செய்பவர்களிடமும் பேச வேண்டும்.
- பண்ணையைச் சுற்றியும் சேமிப்புக் கிடங்கையும் குப்பைக் குவியல்களையும் பார்வையிட வேண்டும்.
- வேளாண்மையில் பயன்படுத்தப்படும் ரசாயனங்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் அரசின் திட்டங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.
- அந்தப் பகுதியிலுள்ள இடுப்பொருள் அங்காடிகளைப் பார்வையிட வேண்டும்.



**நீங்கள் காவல்துறையைச் சேர்ந்தவர் அல்ல; துப்பறிபவரும் அல்ல – ஆனால் நீங்கள் முறையாகவும், முழுமையாகவும் தகவல்களை, நட்புரீதியில் சேகரிக்கத் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.**

# கண்காணிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் (1)

| | |
|---|---|
| இயற்கைவழி வேளாண் நிலங்கள் | ▪ பயிர்ப் பாதுகாப்பில் உரங்கள் மற்றும் களைக்கொல்லிகளைப் பயன்படுத்துவது.<br>▪ மண்வளத்தை மேம்படுத்துவதற்கும் மண் அரிப்பைத் தடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா?<br>▪ ஊடுபயிர்களில் ரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா?<br>எ.கா: காப்பிச் செடிகளுக்கு இடையே ஊடுபயிராக ரசாயன முறையில் சோளத்தைப் பயிரிடுதல். |
| வீட்டு உபயோகத்திற்காக ரசாயன முறையில் சாகுபடி | ▪ ரசாயனப் பயிர்களுக்கும் இயற்கை முறையில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கும் ஒரே தெளிப்பான் பயன்படுத்தப்படுகிறதா? எ:கா: கைதெளிப்பான்.<br>▪ இயற்கை இடுபொருட்களுடன் ரசாயனப் பயிர்களுக்கான இடுபொருட்களும் சேமிக்கப்படுகின்றனவா?<br>▪ ரசாயன வயல்களில் இயற்கை முறையில் பயிர்கள் சாகுபடியாகின்றனவா? |
| எல்லை / வரப்போரப் பகுதிகள் | ▪ அருகாமையில் உள்ள ரசாயன வயல்களிலிருந்து ஏதேனும் ரசாயனப் பொருட்கள் நம் வயலுக்கு வருகின்றனவா?<br>▪ வீட்டு உபயோகத்திற்கான ரசாயன வயல்களிலிருந்து ஏதாவது கசிவு இயற்கை வயலில் ஏற்படுகிறதா? |
| விதைப்பு | ▪ விதைகள் ரசாயனங்களில் நேர்த்திசெய்யப்பட்டவையா?<br>▪ மரபணு மாற்றம்செய்யப்பட்ட விதைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவா? எ.கா: சோயா, மக்காச்சோளம், பருத்தி<br>▪ இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளைப் பயன்படுத்த விவசாயி முயன்றாரா? |
| பாசனம் | ▪ தண்ணீர் அசுத்தமாக இருக்கிறதா?<br>▪ ரசாயனங்களால் மாசடைந்த தண்ணீரா? எ.கா: ரசாயன வயல்களிலிருந்து நீர் இயற்கை வயல்களுக்குப் பாய்தல் |

# கண்காணிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்கள் (2)

| | |
|---|---|
| கால்நடைகள் | ▪ இயற்கைவழி வேளாண் தரநிர்ணயங்களுக்கு உட்பட்டவை அல்ல.<br>▪ கால்நடைகள் தகுந்த முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பதையும் அவற்றுக்கு ஏற்படும் உண்ணி போன்ற பிரச்சினைகளுக்கு ரசாயனங்களைப் பயன்படுத்தும்போது அவற்றால் பயிர்களுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். |
| விவசாயிகள் தயாரிக்கும் ஆவணங்கள் | ▪ மகசூல் : சரியான மதிப்பீடா?<br>▪ இடுபொருட்கள் : வெளி இடுபொருட்களின் பயன்பாடு பதிவுசெய்யப்பட்டிருக்கிறதா?<br>▪ வரைபடங்கள் சரியான தகவல்களைத் தருகின்றனவா? |
| அறுவடை | ▪ இயற்கைவழி விளைபொருட்களையும் ரசாயன விளைபொருட்களையும் கொள்முதல் அலுவலர் கலந்து விடுகிறாரா?<br>▪ பிறருடைய பொருட்களையும் விவசாயி விற்பனை செய்கிறாரா? (அளவை) சரிபார்க்க வேண்டும் |
| சேமிப்பு இடம், பக்குவப் படுத்தும் இடங்கள் | ▪ விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும் இடங்கள் தனியாகவும், சுத்தமாகவும் இருக்கின்றனவா?<br>▪ கலப்படம் ஏற்பட வாய்ப்புகள் உண்டா? (எ.கா) இயற்கை விளைபொருட்களையும் சான்றளிக்கப்படாத விவசாயியின் விளைபொருட்களையும் அருகருகில் காயவைத்தல். கிராமத்தில் விளைபொருட்களைப் பக்குவப்படுத்துவதற்கு போதுமான இட வசதி இருக்கிறதா?<br>▪ பூச்சிக்கட்டுப்பாட்டுக்காக ரசாயனங்கள் பயன்படுத்தப்பட்ட சேமிப்பு இடத்தில் இயற்கை விளைபொருட்களைச் சேமித்துவைக்கும்போதும், காயவைக்கும்போதும் தரம் கெடலாம். |
| விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும் ஆலைக்குக் கொண்டு செல்லுதல் | ▪ விளைபொருட்கள் தரங்கெடுதல் / கலந்துவிடுதல் |
| சாக்குப் பைகள் மற்றும் கொள்கலன்கள் | ▪ தூய்மையற்றவை அல்லது தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காதவை / நிர்ணயங்களுக்கு மாறுபட்டவை. |

# முக்கியமாகக் கவனிக்க வேண்டிய காரணிகள்



இரண்டு மாதங்களுக்கு முன் ரசாயனம் தெளிக்கப்பட்ட அடையாளங்களை இலைகளில் காணலாம்.



பூச்சிக்கொல்லி பாட்டில்கள் வயலில் காணப்படுகின்றன.



களையெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதா / களைக்கொல்லிகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவா?



விளைபொருட்களை அளக்கும் போது கலப்படம் ஏற்படுகிறதா?

# முக்கியமாகக் கவனிக்க வேண்டிய காரணிகள்



விவசாயியின் சேமிப்பு அறை



இயற்கை வயலிலிருந்து ரசாயனப் பாட்டில்கள் கண்டெடுக்கப்படுகிறது.

# முக்கியமாகக் கவனிக்க வேண்டிய காரணிகள்



விளைபொருட்களை வயலில் பக்குவப்படுத்தும்போது கலப்படம் ஏற்படுகிறதா?



கால்நடைப் பராமரிப்பு

# மகசூல் மதிப்பீட்டை எதற்காக மேற்கொள்ள வேண்டும்?

- எதிர்பார்க்கப்பட்ட மகசூலை, கிடைத்த மகசூலுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு மகசூல் மதிப்பீடு பயன்படுகிறது.

- விவசாயிகள் விற்பனைசெய்யும் பொருட்கள் அவர்களுடைய வயல்களில் விளைந்தவைதானா என்பதைச் சரிபார்த்து உறுதிசெய்துகொள்வதற்கு மகசூல் மதிப்பீடு பயன்படுகிறது.



# அகக் கட்டுப்பாட்டு முறைமையின்படி மகசூல் மதிப்பீடு எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது?

விவசாயிகள் மற்றும் / அல்லது கள அலுவலர் மகசூலை மதிப்பிடுவார்கள்

↓

பண்ணையின் ஆய்வுப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்களை அக ஆய்வாளர் சரிபார்ப்பார்

சில திட்டங்களில் ஒரு நபரால் ஒரே தடவை செய்து முடிக்கப்படும்

↓

மகசூல் சரியாகத்தான் மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பது உறுதியானதும் அது விவசாயிகளின் படிவத்தில் குறிக்கப்படும்

↓

( அறுவடைக்கு முன் ஒரு முறை கொள்முதல் விவரங்களை உறுதிசெய்துகொள்வதற்காகப் பண்ணையைப் பார்வையிடுதல் ) தேவைப்பட்டால்,

↓

மகசூல் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கொள்முதல் முறைகள் தீர்மானிக்கப்படுகின்றன

# மகசூலை மதிப்பிடுதல்

**மகசூல் : பண்ணையில் அறுவடைசெய்யப்படும் ஒரு குறிப்பிட்ட பொருளின் மொத்த அளவு.**

பயிரிடப்படும் நிலம் எவ்வளவு சரிவாக இருக்கிறது, மண் வகை, உழவியல் முறைகள் மற்றும் தட்பவெப்ப நிலைகளை (வறட்சி, மழை...) பொறுத்து மகசூல் வேறுபடும்.

பண்ணையில் தற்போது இருக்கும் பயிர்கள், முந்தைய பட்டத்தில் செய்யப்பட்ட அறுவடை, விற்பனைத் தகவல்கள், பொதுவாக அந்தப் பகுதியில் பெறப்படும் மகசூல் போன்ற தகவல்களின் அடிப்படையில் மகசூல் மதிப்பிடப்படுகிறது.

அறுவடைக்கு முன் மகசூலைத் துல்லியமாகக் கணக்கிடுவதற்கு விவசாயியிடம் பல முறை பேச வேண்டும். அதற்கு அதிக நாட்கள் ஆகும்.


தகவல்களைச் சரியான முறையில் பதிவுசெய்வதன் மூலமாகவும் (சம வயதுடைய மரங்களின் மொத்த எண்ணிக்கை) அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துவதில் நல்ல அனுபவமுள்ள ஊழியர்களை / விவசாயிகளை நியமித்து, அவர்களைக் கொண்டு மதிப்பீடு செய்வதன் மூலமாகவும், கொள்முதல் மற்றும் விற்பனைத் தகவல்களைச் சரியாகச் சேகரிப்பதன் மூலமாகவும் மகசூல் மதிப்பீட்டைத் துல்லியமாகச் செய்ய முடியும்.

நாம் மதிப்பீடுசெய்யும் பகுதிக்கு ஒத்துவரும் பொதுவான அளவீடுகளைக் கொண்டு மதிப்பீடுசெய்ய வேண்டும்.


# தகவல்களை ஒப்பிட்டுச் சரிபார்த்தல்



விவசாயிகளின் மதிப்பீடுகள்
மற்றும் விற்பனைப் பதிவேடுகள்



பொதுவாக ஒரு மரம்/
ஏக்கரிலிருந்து கிடைக்கக்கூடிய மகசூல்







கொள்முதல்
பட்டியல்



களப்பணியாளரின் மதிப்பீடு



தட்பவெப்ப நிலைகள்

# விவசாயிகளிடமிருந்து சரியான விவரங்களைப் பெறுவதில் உள்ள சவால்கள்


**விவசாயிகள், அவர்களுடைய மகசூல் பற்றிய சரியான விவரங்களைத் தராமல் இருப்பதற்கு பல முறையான காரணங்கள் இருக்கலாம். இதை கருத்தில் கொண்டு, ஆய்வாளர் விவசாயிகளைச் சரியான விவரங்களை அளிக்கும்படி ஊக்கப்படுத்த வேண்டும்.**

**எடுத்துக்காட்டுகள்**

- அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டுமே என்ற பயமாக இருக்கலாம்.
- விவசாயிகள், மொத்த மகசூல் என்பது பக்குவப்படுத்துபவருக்கு விற்பனை செய்யும் அளவு என்றும் அதில் வீட்டு உபயோகத்திற்கான மற்றும் இதர விற்பனைக்குத் தேவையான தானியம் அடங்காது என்றும் நினைத்து கொண்டு இருக்கலாம்.
- விவசாயி விவரங்களை மறந்துபோய்விட்டு இருக்கலாம். அல்லது எதன் அடிப்படையில் கேள்வி கேட்கப்படுகிறது என்பதை புரிந்து கொள்ளாமல் இருக்கலாம்.
- சில இடங்களில், தட்பவெப்ப நிலை மாறுதல்களினால் மகசூலில் அதிக வேறுபாடுகள் இருக்கலாம்.
- அறுவடைக்கு முன்பே மகசூலை மதிப்பீடு செய்வது கடவுளுக்கு விரோதமான செயலாகக் கருதலாம்.
- இதர விவசாயிகளுக்கு முன்பு மகசூலின் அளவை அதிகப்படுத்திச் சொல்வதைப் பெருமையாக உணரலாம்.



# அக ஆய்வு - சுழற்சி முறை





அக ஆய்வு

விளைபொருட்களின்
வரத்தைக்
கண்காணித்தல்

சீரமைப்பு நடவடிக்கைகள்

அனுமதி அளிப்பதைக் குறித்த முடிவுகள் → ஒழுங்கு நடவடிக்கைகள்

# இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்தின் கீழ் எவ்வளவு கட்டுப்பாடு தேவை?



# அக அனுமதி



அக ஆய்வு

ஆய்வின்போது பயன்படுத்தப்படும் கவனிப்புப் பட்டியல் – பரிந்துரைகள்

- கவனிப்புப் பட்டியலைச் சரிபார்த்தல்.
- அனுமதி அளிப்பதற்கான முடிவுகள்.
- சீரமைப்பு நடவடிக்கைகள் பற்றி முடிவெடுத்தல்.
- தேவையான ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**அக அனுமதி வழங்கும் மேலாளர் அல்லது அக அனுமதிக் குழு**

அனுமதி வழங்கப்பட்ட விவசாயிகளின் பட்டியல் (இயற்கை மற்றும் இயற்கை முறைக்கு மாறிவரும் விவசாயிகள்)

ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளின் பட்டியல்

# கட்டுப்பாட்டை மீறும் சில செயல்பாடுகள்




மண்ணரிப்பு




பண்ணையில் சேமித்து வைத்திருக்கும் ரசாயனங்கள்



களைக்கொல்லிகளைப் பயன்படுத்துதல்




தழை, மணி, சாம்பல் சத்துகள் மற்றும் யூரியாவைப் பயன்படுத்துதல்



இலைகளில் ரசாயனங்கள் தெளிக்கப்பட்டதற்கான அடையாளங்கள்


# கொள்முதல் செய்யும்போதும் பக்குவப்படுத்தும்போதும் ஏற்படக்கூடிய தவறுகள், தவறான கொள்முதல் கணக்குகள்



வாழைப்பழங்களைப் பெட்டிகளில் அடுக்கும்போது கலப்படம் ஏற்படும்



சில மூட்டைகளில் அடையாள அட்டைகள் இல்லை. அவை இயற்கை விளைபொருட்கள்தானா என்று தெரியாமல் போகிறது.



தவறான கொள்முதல் கணக்குகள்




இயற்கை விவசாயி வீட்டில் இல்லாத காரணத்தால் கொள்முதல் அலுவலர் ரசாயன முறையில் சாகுபடி செய்த விளைபொருட்களை வாங்கி விடும் நிலை ஏற்படுகிறது.

# தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காதச் சூழ்நிலைகளில் என்ன செய்ய வேண்டும்?

**பிரச்சினை**

→

**விசாரணை**

- **என்ன நடந்தது?**
- **ஏன் நடந்தது?**
- எப்போது நடந்தது?
- பாதிக்கப்பட்ட பொருட்கள் எவை?

→

**முடிவுகள்**

இயற்கைப் பொருட்களுக்கு அனுமதியளிக்கும் மேலாளர் அல்லது அனுமதிக்குழு மேற்கொள்ள வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகள் சீரமைப்பு நடவடிக்கைகள்

↓

**நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

**அதைப் பதிவுசெய்ய வேண்டும்**

**குறிப்பு :** முக்கியமான பிரச்சினைகளை உடனடியாக அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்தும் ஒருங்கிணைப்பாளருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

# ஒழுங்கு நடவடிக்கைகள் : சில உதாரணங்கள்

| ஒழுங்கு நடவடிக்கைகள் | நடவடிக்கைக்கான சூழ்நிலைகள் |
|---|---|
| ▪ என்ன செய்ய வேண்டும் என்பதை எழுத்து மூலம் தெரிவித்தல்<br>▪ அகக் கட்டுப்பாட்டு முறைமையின்படி விவசாயிகளுக்கு அபராதம் விதித்தல்<br>▪ உரிய சீரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளும்வரை விவசாயியைத் தற்காலிகமாகத் திட்டத்திலிருந்து விலக்கிவைத்தல்.<br>▪ விவசாயியின் சான்றிதழை ரத்துசெய்தல் → மாற்றுக் காலமான 36 மாதங்கள் மறுபடியும் துவங்கும்<br>▪ விவசாயி நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ அகக் கட்டுப்பாட்டு முறைமையின் உறுப்பினர் நிலையிலிருந்து நீக்கப்படுதல். | ▪ ஆவணப் பராமரிப்பில் சிறு தவறுகள், மோசமான பண்ணை நிர்வாகம், இயற்கைவழி வேளாண்மைத் தர நிர்ணயங்களைச் சற்றே மீறிச் செயல்படுதல்.<br>▪ சென்ற வருடத்தின் சூழ்நிலையிலிருந்து எந்த வித முன்னேற்றமும் இல்லாத நிலை; ஆவணப் பராமரிப்பில் பெரும் குளறுபடிகள்.<br>▪ தொடர்ச்சியாக சில அத்துமீறல்கள், ஆனால் இந்த அத்துமீறல்கள் இயற்கைப் பொருட்களின் தரத்தைப் பாதிக்காத நிலை.<br>▪ இயற்கைவழி வேளாண்மைப் பொருட்களின் தரத்தைப் பாதிக்கும் வகையில் தரநிர்ணயங்களை மீறிச் செயல்படுதல்.<br>▪ தெளிவான முறைகேடுகள். ஆய்வுகள் மற்றும் கண்காணிப்புகளுக்கு வேண்டுமென்றே ஒத்துழைக்காமல் இருத்தல், எழுத்து மூலம் கோரப்படும் விளக்கங்களுக்குப் பதில் அளிக்காத நிலை. |

# தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத செயல்களும், ஒழுங்கு நடவடிக்கைகளும்

| தரநிர்ணயங்களை மீறும் செயல்கள் | ஒழுங்கு நடவடிக்கைகள் |
|---|---|
| ▪ விவசாயி இயற்கைவழி பயிர்களில் ரசாயனங்களைப் பயன்படுத்தியுள்ளார். | ▪ மூன்று வருடங்களுக்கு விவசாயியின் இயற்கை வேளாண் சான்றிதழை ரத்துசெய்தல்.<br>▪ இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்திலிருந்து நீக்குதல்.<br>▪ அந்த விவசாயியின் பொருட்கள் ஏற்கனவே வாங்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்டறிதல். |
| ▪ விவசாயி இயற்கைப் பயிர்களுடன் (வீட்டு உபயோகத்திற்காக) ஊடுபயிராக வளர்க்கும் பயிர்களில் ரசாயனங்களைப் பயன்படுத்தியுள்ளார் | ▪ மூன்று வருடங்களுக்கு விவசாயியின் இயற்கைவழி வேளாண் சான்றிதழை ரத்துசெய்தல்.<br>▪ இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்திலிருந்து நீக்குதல்.<br>▪ அந்த விவசாயியின் பொருட்கள் ஏற்கனவே வாங்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிதல். |
| ▪ விவசாயி தன் இயற்கைப் பண்ணையிலிருந்து தள்ளி இருக்கும் வீட்டுத் தோட்டத்தில் ரசாயனங்களைப் பயன்படுத்தியுள்ளார் (தரநிர்ணயங்களின்படி இதற்கு அனுமதி இல்லை). | ▪ விவசாயியை ஒரு வருடத்திற்கு திட்டத்திலிருந்து நீக்குதல்.<br>▪ அந்தக் குறிப்பிட்ட வயலை ரசாயன வயல் என்று குறிப்பிடுதல்.<br>▪ விவசாயிக்குக் கூடுதலாகப் பயிற்சியளித்தல். |
| ▪ விவசாயி தன் பண்ணையை ஒழுங்காகப் பராமரிக்காமல், மண் வள மேம்பாட்டிற்கு எந்தவித முயற்சியும் செய்யாமல் இருத்தல் | ▪ சீரமைப்பு முறைகளை எழுத்து மூலமாகவோ, நேரடியாகவோ விவசாயிக்குத் தெரிவித்தல்.<br>▪ விவசாயிக்குக் கூடுதலாகப் பயிற்சியளித்தல்.<br>▪ தொடர்ந்து அதே நிலை நீடித்தால் அவர் உறுப்பினராக நீடிக்கலாமா என்பதைக் கலந்தாலோசித்து முடிவுசெய்தல். |

# தரநிர்ணயங்களைக் கடைப்பிடிக்காத செயல்களும், ஒழுங்கு நடவடிக்கைகளும்

| தரநிர்ணயங்களை மீறும் செயல்கள் | ஒழுங்கு நடவடிக்கைகள் |
|---|---|
| ▪ இயற்கை முறையில் உற்பத்திசெய்யப்பட்ட நெல்லும் ரசாயன முறையில் அண்டை விவசாயியால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லும் ஒன்றாகக் கலந்துவிட்ட நிலை. | ▪ அவ்வாறு கலக்கப்பட்ட மூட்டைகளை அடையாளம் கண்டு, அவை ரசாயன முறையில் சாகுபடி செய்யப்பட்டவை என்று குறித்தல். |
| ▪ மதிப்பிடப்பட்ட அளவைவிட இரு மடங்கு விளைபொருட்களை விவசாயி விற்பனை செய்கிறார். | ▪ கள அலுவலரைக் கொண்டு களங்களை ஆய்வு செய்தல்.<br>▪ விவசாயி வேறு ஒரு விவசாயியின் விளைபொருட்களையும் சேர்த்து விற்பனை செய்திருந்தால் அவரைத் திட்டத்திலிருந்து நீக்குதல். |
| ▪ சான்று அளிக்கப்படாத விவசாயியிடமிருந்து கொள்முதல் அலுவலர் பொருட்களை வாங்கிவிடுகிறார். | ▪ அந்தப் பொருட்கள் எங்கே சேமித்து வைக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிந்து அவற்றை ரசாயன விளைபொருட்கள் என்று குறிப்பிடுதல்.<br>▪ கொள்முதல் அலுவலருக்குப் பயிற்சியளித்தல் அவர் நேர்மையற்றவர் என்று தெரியவந்தால் அவரைப் பணிநீக்கம்செய்தல். |

# அகக் கட்டுப்பாட்டு முறைமையை ஆவணப்படுத்துதல்





ஒவ்வொரு விவசாயி குறித்தும் அகக் கட்டுப்பாட்டு முறைமைக்குத் தேவையான அடிப்படைத் தகவல்களைச் சேகரித்து ஆவணப்படுத்த வேண்டும்.





அக ஆய்வின்போதும் புற ஆய்வின்போதும் இந்த ஆவணங்கள் சரிபார்க்கப்படும்.





இயன்றவரை விவசாயிகள் தங்களுடைய ஆவணங்களைத் தாங்களே பராமரிக்க வேண்டும். அவர்களால் முடியாதபட்சத்தில் அகக் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். (எ.கா : கள அலுவலர்களே விவசாயிகளின் ஆவணங்களைப் பராமரிக்கலாம்.)

# ஒவ்வொரு விவசாயியைப் பற்றியும் சேகரிக்க வேண்டிய ஆவணங்கள்



- ஒவ்வொரு விவசாயி குறித்தும் பராமரிக்கப்படும் பண்ணை பதிவேட்டில் இந்த ஆவணங்கள் இடம்பெறும்.
- பண்ணைப் பதிவேடுகள் ஒரு மையமான இடத்திலோ கிளை அலுவலகங்களிலோ பாதுகாத்து வைக்கப்படும்.
- விவசாயிகளிடம் குறைந்தபட்சம் அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தமும் இயற்கை வேளாண் அகத் தரநிர்ணயங்களைக் குறித்த தகவல்களும் இருக்க வேண்டும்.

- தரநிர்ணயங்களைப் பின்பற்றுவதற்காக விவசாயிகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தப் படிவம்.
- விவசாயியைப் பற்றிய அடிப்படை விவரங்கள் (பண்ணையின் கடந்தகாலச் செயல்பாடுகள்).
- தொகுக்கப்பட்ட வருடாந்திரக் களப் பதிவேடுகள் (பயன்படுத்தப்பட்ட இடுபொருட்கள், விளைபொருட்களின் அளவுகள்).
- கள ஆய்வின்போது பயன்படுத்தப்பட்ட கவனிப்புப் பட்டியல் (ஒவ்வொரு ஆண்டுக்கும் தனித்தனியே).
- வரைபடங்கள்.
- விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகள், ஆலோசனைகள் பற்றிய தகவல்கள்.

# எந்தப் படிவத்தை உபயோகிக்க வேண்டும்?

- ஒவ்வொரு செயல்பாடுகளைக் குறித்தும் (எ.கா: புதிய விவசாயிகளைத் திட்டத்தில் சேர்த்தல்) தேவையான அடிப்படை விவரங்கள் ஆவணங்கள் பற்றி விவரித்துள்ளோம்.

- பல்வேறு மாதிரி விவர படிவங்கள் உள்ளன. ஆனால், அவை உங்கள் வேளாண் முறைகளுக்கு ஏற்ப சரியாகப் பொருந்தக் கூடியவையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை.
- பொதுவாக, அகக் கட்டுப்பாட்டு முறைமைகளைச் செயல்படுத்துபவர் தன்னுடைய சொந்த தேவைக்காக மாதிரி விவர பட்டியலைத் தயாரிப்பார். அது பல்வேறு காரணிகளைப் பொறுத்து வேறுபடும். எடுத்துக்காட்டாக,

  – அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்தும் பணியாளர்களின் தகவல்களைப் பதிவு செய்யும் திறமை.

  – பயிர்கள் மற்றும் பண்ணைகளின் தன்மைகள் (வருடாந்திர பயிர்கள் / பயிர் சுழற்சி முறை அல்லது நீண்ட காலப் பயிர்கள்).

  – பண்ணையில் சூழ்நிலை மாற்றங்கள் ஏற்படும் கால இடைவெளி

  – உற்பத்தி முறையில் காணப்படும் சிக்கல்கள்

  – அகக் கட்டுப்பாட்டு முறைமையின் கீழ் எதிர்பார்க்கப்படுவது என்ன?

  – பாதிப்புகள் (அதிகம் / நடுத்தரமான பாதிப்பு – இதை குறித்து அதிக தகவல்கள் தேவை)

# விவசாயிகள், அகக் கட்டுப்பாட்டு முறைமை - இருவரிடமும் எந்த எந்த ஆவணங்கள் இருக்கும்

முடிந்தவரை எல்லா ஆவணங்களையும் விவசாயிகளே பராமரிப்பதை ஊக்குவிக்கும் ஒரு அகக் கட்டுப்பாட்டு முறைமை இங்கு எடுத்துக்காட்டாகத் தரப்படுகிறது.


| விவசாயி பராமரிக்கும் பதிவேடுகள் | அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவர் பராமரிக்கும் பதிவேடுகள் |
|---|---|
| ▪ ஒப்பந்தம்.<br>▪ பண்ணையின் தினசரிப் பதிவேடுகள், மகசூல் விவரங்கள். பண்ணையைக் குறித்த தொகுக்கப்பட்ட விவரங்கள்.<br>▪ பண்ணையின் வரைபடங்கள்.<br>▪ சென்ற ஆண்டின் அக ஆய்வறிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்.<br>▪ விற்பனை ரசீதுகள். | ▪ ஒப்பந்தம்.<br>▪ விவசாயியைப் பற்றிய தகவல்கள், சாகுபடியாகும் பயிர்கள், பண்ணையின் பரப்பளவு, மகசூல் விவரங்கள்.<br>▪ பண்ணையின் ஒட்டுமொத்த வரைபடம்.<br>▪ மேம்பாட்டுக்கான பொறுப்புகளை விவசாயி ஏற்றுக்கொண்டது, ஒழுங்கு நடவடிக்கைகளைப் பற்றிக் கலந்து பேசியது ஆகியவை குறித்த தகவல்களைக் கொண்ட அக ஆய்வறிக்கை.<br>▪ புற ஆய்வறிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள். |

# அகக் கட்டுப்பாட்டு முறைமையிடம் எந்த எந்த ஆவணங்கள் இருக்கும்

விவசாயி படிப்பறிவு இல்லாதவராக இருக்கும் நிலைமையில் விவசாயியின் ஆவணங்கள் முழுவதையும் அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவரே பராமரிக்கும் ஒரு சூழல் இங்கு எடுத்துக்காட்டாகத் தரப்படுகிறது.

| விவசாயி பராமரிக்கும் பதிவேடுகள் | அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவர் பராமரிக்கும் பதிவேடுகள் |
|---|---|
| ▪ கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் மற்றும் அகத் தரநிர்ணயங்கள் குறித்த தகவல்கள்.<br>▪ (பண்ணைக் குறிப்பேடு : தினசரிச் செயல்பாடுகளை இதில் குறிக்க விரிவாக்கப் பணியாளர் உதவுவார்).<br>▪ விற்பனை ரசீதுகள். | ▪ ஒப்பந்தம்.<br>▪ வரைபடங்கள்.<br>▪ விவசாயியைப் பற்றிய தகவல்கள்: சாகுபடியாகும் பயிர்கள், பண்ணையின் பரப்பளவு, மகசூல் பற்றிய தற்போதைய நிலவரத்தைக் காட்டும் களப்பதிவேடுகள்.<br>▪ மேம்பாட்டுக்கான பொறுப்புகளை விவசாயி ஏற்றுக்கொண்டது, ஒழுங்கு நடவடிக்கைகளைப் பற்றிக் கலந்து பேசியது ஆகியவை குறித்த தகவல்களைக் கொண்ட அக ஆய்வறிக்கை.<br>▪ புற ஆய்வறிக்கை மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்.<br>▪ விவசாயியைப் பற்றிய விரிவாக்கப் பணியாளரின் குறிப்புகள். |

# விவசாயிகள் பட்டியல் - அகக் கட்டுப்பாட்டின் தொகுப்பு



# ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளின் பட்டியல்

**விவசாயிகளின் மீது மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளை அகக் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் பதிவுசெய்து, அந்தக் கோப்புகளைப் பராமரிக்க வேண்டும்.**

அந்தக் கோப்பில் குறைந்தபட்சம் இருக்க வேண்டிய தகவல்கள்.


- விவசாயியின் பெயர்.
- விவசாயியின் குறியீட்டு எண்.
- ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட தேதி (முடிவுகள்).
- ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கான காரணங்கள்.
- நடவடிக்கையின் விவரங்கள்.
- நடவடிக்கை அமலில் இருக்கும் காலம்

# அகக் கட்டுப்பாட்டு முறைமைப் பணியாளர்கள்

- அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துவதற்கு ஒருவர் பொறுப்பாளராக இருப்பார். மற்ற பணியாளர்கள் செய்ய வேண்டிய பணிகளை இவர் பிரித்துக் கொடுப்பார். இதன் மூலம் ஒவ்வொரு பணிக்கும் ஒருவர் பொறுப்பாக இருப்பார்.

- அலுவலர்கள் அனைவரும் தகுந்த தேர்ச்சி பெற்றவர்களாகவும் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து செயல்படுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

**திட்டத்தில் ஈடுப்பட்டுள்ள பணியாளர்களின் பதவி நிலைகளை கீழ்காணும் வரைப்படத்தில் கொடுக்கப்பட்டதுபோல் விளக்க வேண்டும்.**



பணியாளர்கள் அலுவலர்களாகவோ, ஒப்பந்ததாரர்களாகவோ இருக்கலாம். (எ.கா: கொள்முதல் செய்வது, விளைபொருட்களை எடுத்துச்செல்வது)

# அகக் கட்டுப்பாட்டு முறைமையில் முக்கியமான பதவிகள்

- அகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒருங்கிணைப்பாளர்
  - அங்கீகாரம் வழங்கும் அதிகாரி
  - அக ஆய்வாளர்
  - கள அலுவலர் / ஆலோசகர்
  - கொள்முதல் அலுவலர்
  - கிடங்கு மேலாளர்
  - விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும் பகுதியின் மேலாளர்

இவர்கள் விளைபொருட்களைப் பக்குவப்படுத்துபவரின் கீழ் பணியாற்றலாம்

ஒரு நபர் பல பதவிகளை வகிக்கலாம். ஆனால் ஒவ்வொரு பதவியைப் பற்றியும் அகக் கட்டுப்பாட்டுக் கையேட்டில் தெளிவாக விவரிக்க வேண்டும்.

# அகக் கட்டுப்பாட்டு முறைமை ஒருங்கிணைப்பாளர் (அகக் கட்டுப்பாட்டு முறைமை மேலாளர்)

**அகக் கட்டுப்பாட்டு முறைமை ஒருங்கிணைப்பாளர்**

- அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்தி, அதன் செயல்முறைகளை விளக்குதல்
- சான்றிதழ் வழங்குவதற்கான அனுமதி வழங்கும் அலுவலரின் பணிகளை ஒருங்கமைத்தல்
- புற ஆய்வுகளை ஒருங்கிணைத்தல்
- சான்றளிப்பவர் தொடர்பு கொள்ளகூடிய நபராக இருத்தல்
- களப்பணியார்களின் பணிகளை ஒருங்கிணைப்பவர்
- விளைபொருட்களின் வரத்து மற்றும் கையாளுதலைக் கண்காணித்தல்

**இந்த முக்கியமான பதவியை வகிக்கும் நபர் கீழ்காணும் திறமைகளுடையவராய் இருக்க வேண்டும்.**

- அகக் கட்டுப்பாட்டு முறைமையின் தரநிர்ணயங்கள், செயல்முறைகள் மற்றும் ஆவணங்கள் பற்றியும் புற சான்றளிப்பு நிறுவனத்தின் தேவைகள் பற்றியும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.
- திட்டத்தின் கீழுள்ள நபர்களைக் கண்காணித்தல், அகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் செயல்முறைகளைப் பற்றி மற்றவர்களுக்கு பயிற்சி அளிக்கும் திறமையுடையவராய் இருத்தல்.
- ஆவணங்களைக் கையாளும் திறமையுடையவராய் இருத்தல்
- தகவல்களைச் சேகரிக்கும் திறமையுடையவராய் இருத்தல்

**பெரும்பாலான திட்டங்களில் அகக் கட்டுப்பாட்டு முறைமை ஒருங்கிணைப்பாளரே, அக அங்கீகார மேலாளராகவும் செயல்படுவார்.**

# அங்கீகாரம் அளிக்கும் மேலாளர் அல்லது அங்கீகாரம் அளிக்கும் குழு



# அங்கீகாரம் வழங்குபவருக்கான குறைந்தபட்சத் தகுதிகள்

- இயற்கைவழி வேளாண்மைக் கொள்கைகளை அறிந்திருக்க வேண்டும்.
- திட்டத்தின் விதிமுறைகளை அறிந்திருக்க வேண்டும்.
- விவசாயிகளிடையிலும் நிறுவனத்திலும் நன்மதிப்பு பெற்றவராக இருக்க வேண்டும்.
- அலுவலரின் சொந்த நலன்களும் அவர் அனுமதி அளிக்கும் விவசாயியின் நலன்களும் ஒன்றையொன்று பாதிக்காத நிலைமை இருக்க வேண்டும்.

**ஆய்வுகளையும் அங்கீகாரம் வழங்குவதையும் ஒருவரே மேற்கொள்ளக் கூடாது**

# அக ஆய்வாளர்

அக ஆய்வாளர் அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறார்.



அக ஆய்வாளர் தொழில்நுட்ப அறிவும் பிறருடன் சேர்ந்து வேலைசெய்யும் திறமையும் கொண்டவராக இருக்க வேண்டும். மேலும், திட்டத்தில் ஏற்படக்கூடிய தவறுகளைக் கண்டறியக் கூடியவராகவும், பதிவேடுகளை நல்ல முறையில் பராமரிக்கும் திறமை கொண்டவராகவும் இருக்க வேண்டும்

# அக ஆய்வாளர் அறிந்திருக்க வேண்டியவை

- அக ஆய்வாளர் அகக் கட்டுப்பாட்டு முறைமை ஒருங்கிணைப்பாளரின் கண்ணும் காதுமாகச் செயல்பட வேண்டும். அவருக்கு அளிக்கப்படும் ஒத்துழைப்பு, தகவல்கள் ஆகியவற்றைப் பொறுத்தே அகக் கட்டுப்பாட்டு முறைமையின் வெற்றி அமையும்.

- அக ஆய்வாளரின் பணிகள் பயன்தர வேண்டுமானால் அவர் தன்னுடைய தொழில்நுட்ப அறிவும், பிறருடன் சேர்ந்து வேலை செய்யும் திறமையும் தெளிவாக வெளிப்படும் விதத்தில் செயல்பட வேண்டும்.


- முறையான ஆய்வாளர் பயிற்சி முன்னுரிமை பெற வேண்டும். கோட்பாட்டு அறிவையும் செயல்பாட்டு அறிவையும் ஒருசேர இந்தப் பயிற்சி கொண்டிருந்தால் பலன் தருவதாக அது அமையும்.

- அலுவலக, நிர்வாகப் பிரிவுகள் தங்களால் இயன்ற அளவுக்கு, அக ஆய்வாளருக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.


# அக ஆய்வாளருக்கான தகுதிகள்

- உள்ளூர் மக்கள் பேசும் மொழியை நன்றாக அறிந்தவராக இருக்க வேண்டும். உள்ளூர் மக்களின் போக்குத் தெரிந்தவராக இருக்க வேண்டும். யார்யார் எந்தச் சமயங்களில் எப்படி நடந்துகொள்வார்கள் என்பது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.
- எழுதப் படிக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும். திட்டம் எந்த மொழியில் செயல்படுத்தப்படுகிறதோ அதே மொழியில் அறிக்கைகளை அகக் கட்டுப்பாட்டு முறைமைக்கு அளிக்க வேண்டும்.
- திட்டம் செயல்படும் பகுதியில் மேற்கொள்ளப்படும் வேளாண்மை உற்பத்தி முறைகளைப் பற்றி அறிந்தவராக இருக்க வேண்டும்.
- இயற்கைவழி வேளாண்மைக் கொள்கைகளையும் அவற்றைச் செயல்படுத்தும் முறைகளையும் நன்றாக அறிந்தவராக இருக்க வேண்டும்.
- அகக் கட்டுப்பாட்டு முறைமைகளிலும் அக விதிமுறைகளிலும் திறமையானவராக இருக்க வேண்டும்.
- தன் பணி நேர்மையைப் பாதிக்கக்கூடிய முரண்படும் நலன்கள் அவருக்கு இருக்கக் கூடாது.

# அக ஆய்வாளரின் பணிகள்



# கள அலுவலர் / ஆலோசகர்



# அகக் கட்டுப்பாட்டு முறைமையின் கீழ் உள்ள மற்ற பதவிகள்

அகக் கட்டுப்பாட்டு முறைமையின் மேலாண்மை அமைப்பு மற்றும் திட்டத்தின் அளவைப் பொறுத்து அகக் கட்டுப்பாட்டு முறைமையில் இரண்டு முக்கியமான பதவிகள் உள்ளன.

**சில எடுத்துக்காட்டுகள்**




**தலைமை பயிற்சி அலுவலர்**

விவசாயிகளுக்கான பயிற்சிகளை ஏற்பாடு செய்தல், கள விரிவாக்கப் பணிகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளைத் தலைமை பயிற்சி அலுவலர் மேற்கொள்ளுவார்.



**அகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஆவணப் பராமரிப்பு அலுவலர்**

விவர ஆவணங்களைப் பராமரிப்பது, தகவல்களைக் (விவசாயிகளின் பட்டியல்) கணிணியில் பதிவு செய்வது போன்றவை அகக் கட்டுப்பாட்டு முறைமை அலுவலரின் பொறுப்பாகும்.



**தலைமை அக ஆய்வாளர்**

# முரண்படும் நலன்கள்

ஆய்வாளர் அல்லது அனுமதி தரும் மேலாளர் பாரபட்சமின்றிச் செயல்படுவதை முரண்படும் நலன்கள் பாதிக்கும்.

அகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒட்டுமொத்த நேர்மையை முரண்படும் நலன்கள் பாதிக்கும்.

முரண்படும் நலன்கள் இருக்கும் நிலைமைகளைத் தவிர்க்க, ஆரம்பத்திலேயே அவற்றை முறையாக எழுத்தில் தெரிவித்துவிட வேண்டும். அகக் கட்டுப்பாட்டு முறைமை மேலாளர் அவ்வப்போது இந்தப் பதிவுகளைப் பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட பணியாளர் இவ்வாறு முரண்படும் நலன்களைக் கொண்ட, விவசாயிகளின் பண்ணைகளை ஆய்வுசெய்வதை அல்லது அவற்றுக்கு அனுமதி அளிப்பதைத் தவிர்க்க ஆவன செய்வார்.



**எடுத்துக்காட்டு : அக ஆய்வாளர் தன்னுடைய நெருங்கிய நண்பர்கள் (அ) குடும்பத்தினரின் வயல்களை ஆய்வு செய்ய கூடாது**

# ஆய்வா, ஆலோசனையா?

- இயற்கை வேளாண்மைத் திட்டத்தில் கள ஆலோசனைப் பணி முக்கியப் பங்கு வகிக்கிறது. பெரும்பாலும் கள ஆலோசனைப் பணியாளர்களே அக ஆய்வாளர்களாகவும் செயல்படுகிறார்கள்.
- கள விரிவாக்கப் பணியாளர்கள் விவசாயிகளுடன் மிகவும் நெருங்கிப் பழகுபவர்களாக இருப்பதாலும், பெரும்பாலும் அதே கிராமத்தில் வசிப்பதாலும் அவர்களால் நடுநிலையாக இருந்து ஆய்வுகளை மேற்கொள்ள முடிவதில்லை.
- இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகப் பல இயற்கை வேளாண்மைத் திட்டங்களில் திட்டம் செயல்படுத்தப்படும் ஒரு பகுதியின் கள அலுவலர் வேறொரு பகுதியின் ஆய்வாளராகச் செயல்படுவார்.

# ஆய்வா, ஆலோசனையா?

- ஒருவரே களப் பணியையும் அக ஆய்வையும் மேற்கொள்ளலாம். ஆனால், அவற்றைத் தனித்தனியாக மேற்கொள்ள வேண்டும். அக ஆய்வாளர் விவசாயிகளுடன் மிகவும் நெருங்கிப் பழகாத நிலைமைகளில் மட்டுமே பாரபட்சமற்ற ஆய்வு சாத்தியமாகும்.
- தரத்திற்குத் தேவையானவை பற்றியும் அவற்றுக்காக எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைப் பற்றியும் விவசாயிகளுக்குத் தெரிவிப்பது ஆலோசனையாகக் கருதப்படாது. அக ஆய்வின்போது சில ஆலோசனைகளையும் விவசாயிகளுக்கு வழங்கலாம்.

# கொள்முதல் அலுவலர்

**கொள்முதல் அலுவலர் கீழ்க்காணும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.**

- விவசாயிகளின் அடையாள அட்டையைச் சரிபார்க்க வேண்டும்.
- விளைபொருட்களின் எண்ணிக்கையை அல்லது எடையைச் சரிபார்க்க வேண்டும்.
- ஒப்புக்கொள்ளப்பட்ட தரத்தில் விளைபொருட்கள் இருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும்.
- விளைபொருட்களின் அளவு ஏற்கனவே மதிப்பிடப்பட்ட அளவை ஒத்திருக்கிறதா, மகசூல் மதிப்பீட்டிற்குள் இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். ஒத்திருக்காத பட்சத்தில் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டும்.
- சம்பந்தப்பட்ட ஆவணங்களை முறையாகப் பராமரிக்க வேண்டும்.
- விற்பனைக்கான ரசீதுகளைக் கொடுக்க வேண்டும்.
- பண விவரங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.



# பணியாளர்களின் விவரங்களை ஆவணப்படுத்துதல்

அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவர் ஒவ்வொரு பணியாளரின் கடமைகளையும் பொறுப்புகளையும் தெளிவாக வரையறுத்து ஆவணப்படுத்த வேண்டும்.

பொதுவாக, அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவர் ஒவ்வொரு முக்கியமான பதவிக்கும் தனியாகக் கோப்பு ஒன்றை வைத்துக்கொள்வார். இதில் இடம் பெறுபவை :



- பணி விளக்கம் மற்றும் கடமைகளின் விவரங்கள்
- பணியாளரின் கல்வி விவரங்கள்
- பணியாளரின் வேலை குறித்த ஒப்பந்தம்; வேலை சம்பந்தப்பட்ட விவரங்கள்.
- பணிச் சூழ்நிலையில் முரண்படும் நலன்கள் இருந்தால் அவற்றைத் தெரிவிக்கும் படிவத்தில் தகவல்களைத் தருவது.
- குறிப்பிட்ட சில பதவிகளை வகிப்பவர்களின் கையெழுத்திட்ட ரகசியக் காப்பு ஒப்பந்தம்.
- பயிற்சிகள் பற்றிய தகவல்கள்.

# பயிற்சி என்பது மிகவும் முக்கியம்

- அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்தும் பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளிப்பது அகக் கட்டுப்பாட்டு முறைமையின் முக்கியமான அம்சமாகும்.

- **நோக்கங்கள்** : இயற்கைவழி வேளாண்மையின் அடிப்படைக் கொள்கைகளை விவசாயிகளுக்கும் பணியாளர்களுக்கும் விளக்குவது; குறிப்பாக, இயற்கைவழி வேளாண்மைக்கு அகக் கட்டுப்பாட்டு முறைமை எவ்வளவு அவசியம் என்பதையும், முறைமை எதைப் பற்றியது, என்ன செய்யும் என்பதையும் விளக்குவது.



# அக ஆய்வாளருக்கான பயிற்சி

- அக ஆய்வாளர், வருடத்திற்கு ஒருமுறையாவது அக ஆய்வில் நன்கு தேர்ச்சி பெற்ற ஒரு நபரிடம் பயிற்சி பெற வேண்டும்.
- பயிற்சி பெற்ற தேதி மற்றும் பயிற்சி திட்டத்தின் விவரங்களை அகக் கட்டுப்பாட்டு முறைமையின் பணியாளர் கோப்புகளில் பதிவு செய்ய வேண்டும்.

**பயிற்சியில் கீழ்காணும் செயல்பாடுகள் அடங்கியிருக்க வேண்டும்.**

தரநிர்ணயங்கள், செயல்முறைகள் மற்றும் விவரங்களை ஆவணப்படுத்தும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தெரியப்படுத்த வேண்டும்.

ஆய்வாளர்களுக்கான முதல் வருட பயிற்சியின் போது, செயல்முறை பயிற்சியாக அனுபவம் வாய்ந்த ஆய்வாளருடன் ஆய்விற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும், வெவ்வேறு பகுதிகளில் பணியில் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் அதிக அனுபவங்களைப் பெற செய்யலாம்.



# அகக் கட்டுப்பாட்டு முறைமையின் இதர பணியாளர்கள்

- அனைத்து பணியாளர்களும் அவர்களுடைய பொறுப்பிலுள்ள பணிகளுக்கு ஏற்ப பயிற்சி பெற்றிருக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு பணியாளரும், இயற்கைவழி வேளாண்மைப் பற்றிய பொதுவான அறிவையும், அவர்கள் பணியாற்றும் துறையைப் பற்றிய சிறந்த அறிவையும் பெற்றிருக்க வேண்டும்.

- இயற்கைவழி வேளாண்மைச் சான்றிதழ் வழங்கும் அங்கீகாரக் குழுவின் பணியாளர்களுக்கு தொடர்பயிற்சியும் கண்காணிப்பும் தேவை. கொள்முதல் விற்பனை பதிவேடுகள் சரியாக பராமரிக்கப்பட்டால்தான் விவசாயிகளின் மகசூல் மற்றும் விற்பனை அளவுகளை சரிபார்க்க முடியும்.

- விளைபொருட்களைக் கொள்முதல் செய்யும் பணியில் ஈடுப்பட்டுள்ள பணியாளர்களுக்கு, தொடர்பயிற்சியும், கண்காணிப்பும் தேவை. கொள்முதல் மற்றும் விற்பனை பதிவேடுகள் சரியாகப் பராமரிக்கப்பட்டால்தான் விவசாயிகளின் மகசூல் மற்றும் விற்பனை அளவுகளைச் சரிபார்க்க முடியும்.

- பணியாளர்களுக்கு நடத்தப்படும் பயிற்சிகளின் விவரங்கள் மற்றும் தேதியை அகக் கட்டுப்பாட்டு முறைமை பணியாளர் பதிவேடுகளில் குறித்து வைக்க வேண்டும். புற ஆய்வின் போது இந்த பதிவேடுகள் ஆய்வாளருக்குத் தேவைப்படலாம்.

# விவசாயிகளுக்கான பயிற்சிகள்

**ஒவ்வொரு விவசாயிக்கும் இயற்கைவழி வேளாண்மைப் பற்றிய ஒரு அறிமுகப் பயிற்சியை அளிக்க வேண்டும். இயற்கைவழி வேளாண்மையில் ஈடுப்பட்டுள்ள விவசாயிகளுக்குத் தொடர்ந்து பயிற்சி அளிப்பது மிகவும் முக்கியமானதாகும்.**

- விவசாயிகளைப் பயிற்றுவிப்பது அகக் கட்டுப்பாட்டு முறைமையில் மிகவும் முக்கியமான பகுதியாகும்.
- இயற்கைவழி வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் செயல்முறைகள் பற்றி விவசாயிகளின் புரிந்து கொள்ளுதலை மேம்படுத்துவதே பயிற்சிகளின் நோக்கமாகும்.
- விவசாயிகளுக்கு அகக் கட்டுப்பாட்டு முறைமையைப் பற்றி படிபடியாக அறிமுகப்படுத்த வேண்டும். எ.கா: முதலில் இயற்கைவழி வேளாண்மையைப் பற்றி அறிமுகப்படுத்திய பின் குறிப்பிட்ட பிரச்சினையை எடுத்து சொல்ல வேண்டும்.
- மாதிரி பண்ணைகளில் செயல்முறை பயிற்சி அளித்தல், மற்றும் களவிரிவாக்கப் பணியின் மூலம் விவசாயிகளைத் தொடர்ந்து சந்தித்தல் போன்றவைகளை உள்ளடக்கிய பயிற்சி முகாம்களின் மூலம் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கலாம்.



**களப்பயிற்சி**

# தொடர்ந்த பயிற்சி

- மகசூல், இடுபொருட்கள், விற்பனை ஆகியவற்றைப் பதிவுசெய்யும்போதும் தரங்கள், படிவங்கள், செய்முறைகள் ஆகியவற்றில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்களை விவசாயிகளுக்கும் பணியாளர்களுக்கும் இந்தப் பயிற்சிகள் தெரிவிக்கின்றன.

- குறிப்பிட்ட திறமைகளில், எடுத்துக்காட்டாக, மண்வளத்தை இயற்கை வழிகளில் மேம்படுத்துவது போன்றவற்றில் தொடர்ந்து பயிற்சி அளிப்பது விவசாயிகளின் அறிவையும் நம்பிக்கையையும் வளர்க்கிறது. எதிர்காலத்தில் தவறுகள் நிகழும் அபாயத்தைக் குறைக்கிறது.



# தொடர்ந்த பயிற்சி

- திட்டத்தில் விவசாயி எவ்வாறு ஈடுபாட்டுடன் செயல்படுகிறார் என்பதையும், திட்டத்தில் எந்தவிதமான பிரச்சினைகள் ஏற்படலாம் என்பதைக் குறித்தும் கோடிகாட்ட இந்தப் பயிற்சிகள் உதவும்.

- பயிற்சி அளிப்பவர் பயிற்சி வகுப்புகள் நடந்த தேதியையும் கலந்துகொண்டவர்களின் விவரங்களையும் பதிவுசெய்ய வேண்டும். இந்த விவரங்களைக் கொண்டு விவசாயி இயற்கைவழி வேளாண்மையிலும் அகக் கட்டுப்பாட்டு முறைமையிலும் எந்த அளவுக்கு ஈடுபாட்டுடன் இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்..



# அகக் கட்டுப்பாட்டு முறைமை பயிற்சியாளருக்கான தயாரிப்பு பட்டியல் (எடுத்துக்காட்டு)

| பொருட்கள் | சரிபார்க்கப்பட்டது |
|---|---|
| பங்கேற்பாளர்களின் பதிவேடு | |
| பயிற்சிக்குத் தேவையான ஆவணங்கள் (சுவரொட்டிகள்) | |
| ஒப்பந்தப் படிவம் | |
| கேள்விப்பட்டியல் | |
| அடிப்படை தரநிர்ணயங்கள் | |
| அகக் கட்டுப்பாட்டு முறைமையின் தரநிர்ணயங்கள் (சான்றளிப்பவர்களுடையது) | |
| பயிற்சிக்கான உபகரணங்கள் | |
| - சுவரொட்டி காகிதங்கள் | |
| - பேனாக்கள் | |
| - ஒட்டுவதற்குத் தேவையான பட்டைகள் (Sticky tape) | |
| - வெள்ளை எழுது பலகை | |
| - சிற்றுண்டிகள் (தண்ணீர் போன்றவை) | |
| - விவசாயிகளின் ஆவணங்களை வைப்பதற்கான கோப்புகள் (தண்ணீரால் பாதிப்படையாதவை) | |
| - விவசாயிகளுக்குத் தேவையான பேனா மற்றும் புத்தகம் | |
| தொலைக்காட்சி பெட்டி மற்றும் நவீன புகைப்படக் கருவியைக் கொண்டு பயிற்சியைப் பதிவு செய்யலாம். இது ஒரு சிறந்த பயிற்சிக்கான உபகரணமாகும். | |

# விற்பனை, கொள்முதல் குறித்த செயல்முறைகள்

விளைபொருட்களைக் கொள்முதல்செய்தல், கையாளுதல், பக்குவப்படுத்துதல், ஏற்றுமதிசெய்தல் போன்றவை அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவரின் பணியாகும். நிலத்தில் அறுவடை செய்த பிறகு விளைபொருட்கள் எங்கே போகின்றன, எப்படி கையாளப்படுகின்றன போன்றவற்றைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை மற்றவர்களும் (எ.கா: பக்குவப்படுத்துபவர்) எடுத்துக்கொள்ளலாம்.

சான்றளிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து மட்டுமே விளைபொருட்கள் வாங்கப்பட்டுள்ளன என்பதைக் கொள்முதல் வழிமுறைகள் உறுதிசெய்கின்றன.

விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும் இடங்களுக்கு எடுத்துச் சென்ற பிறகும் அவை சான்றளிக்கப்பட்ட இயற்கைவழி விளைபொருட்களாகவே கருதப்படுகின்றன. இவற்றைச் சான்றளிக்கப்படாத விளைபொருட்களுடன் கலந்துவிடக் கூடாது.

# விற்பனை மற்றும் கொள்முதலில் உள்ள வாய்ப்புகள்

விளைபொருட்களை விற்பனை செய்வதிலும் கொள்முதல் செய்வதிலும் பல விதங்கள் உள்ளன.

- **விவசாயிகள், தங்களுடைய விளைபொருட்களைக் கொள்முதல் அலுவலர்களுக்கு நேரடியாகப் பண்ணையிலேயே விற்பனை செய்யலாம்.**
- **விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பனை மையங்களுக்குத் தாங்களே கொண்டு செல்லலாம்.**
- **இரண்டு முறைகளையும் கலந்து மேற்கொள்ளலாம்.**

விளைபொருட்களைக் கொள்முதல் செய்வதிலும் விற்பனைசெய்வதிலும் நிர்ணயிக்கப்பட்ட எல்லா முறைகளும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளனவா என்பதை அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவர் உறுதிசெய்துகொள்ள வேண்டும்.




# கொள்முதல், விற்பனைச் செயல்முறைகளும் அவற்றை ஆவணப்படுத்துதலும்

| **விவசாயியிடமிருந்து விளைபொருட்களைக் கொள்முதல்செய்வதற்கான செயல்முறைகள்** | **கொள்முதல் விவரங்களை ஆவணப்படுத்துதல்** |
|---|---|
| கொள்முதல் மையத்தை அமைக்க வேண்டும். (எடைபார்க்கும் கருவிகள், விவசாயிகளின் பட்டியல், கொடுப்பதற்கான பணம், ரசீது புத்தகம்) | – |
| கொள்முதல் அலுவலர் விவசாயிகளின் அடையாள அட்டைகளையும் அவர்கள் பின்பற்றும் இயற்கைவழி வேளாண்மை முறைகளையும் சரிபார்க்க வேண்டும். | கொள்முதல் பட்டியல் அல்லது சான்றளிக்கப்பட்ட விவசாயிகளின் பட்டியலைத் தயாரிக்க வேண்டும். விவசாயிகளின் இயற்கைவழி வேளாண் நிலையை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். |
| கொள்முதல் அலுவலர் விவசாயிகளுடைய விளைபொருட்களின் தரம், அளவு / எண்ணிக்கை ஆகியவற்றைச் சரிபார்க்க வேண்டும். | கொள்முதல் பட்டியலில், கொள்முதல்செய்யப்படும் பொருளின் அளவு, விவசாயியின் பெயர், விற்பனை செய்யப்படும் தேதி. பொருளின் இயற்கைத் தரம் போன்ற விவரங்களைக் குறித்துக்கொள்ள வேண்டும் |
| கொள்முதல்செய்யப்பட்ட விளைபொருளுக்கான தொகையைச் செலுத்தி, அதற்குரிய ரசீதையும் தயார் செய்ய வேண்டும். | கொள்முதலுக்காக வழங்கப்படும் ரசீதுகளில் விவசாயியைப் பற்றிய விவரங்கள், தேதி, விற்கப்பட்ட பொருளின் அளவு, அதன் இயற்கைத் தரம், செலுத்தப்பட்ட தொகை போன்ற விவரங்கள் இருக்க வேண்டும். |

# கொள்முதல், விற்பனைச் செயல்முறைகளும் அவற்றை ஆவணப்படுத்துதலும்

| விவசாயியிடமிருந்து விளைபொருட்களைக் கொள்முதல்செய்வதற்கான செயல்முறைகள் | கொள்முதல் விவரங்களை ஆவணப்படுத்துதல் |
| --- | --- |
| கொள்முதலுக்கும் பக்குவப்படுத்துவதற்கும் இடையே உள்ள காலத்தில் சேமிப்பு வசதிகள் | விளைபொருட்களைச் சேமித்துவைக்கும் பைகளில் விளைபொருட்களைப் பற்றிய விவரங்கள் (இயற்கைவழி வேளாண்பொருட்களின் குறியீட்டு எண்) அடங்கிய முகப்பு அட்டைகளை இணைக்க வேண்டும். கையிருப்புக் கையேடுகளில் அன்றைய நிலவரப்படி தகவல்களைக் குறிக்க வேண்டும். |
| வாகனங்களில் ஏற்றுதல் | கொள்முதல் பட்டியல் அடங்கிய விளைபொருட்களின் விவர ஆவணங்கள் (தேவைப்பட்டால் இந்த ஆவணங்களையும் இணைக்கலாம்) |
| பக்குவப்படுத்தும் இடத்தில் பொருட்களைப் பெறும்போது அவற்றைக் கொள்முதல் பட்டியலுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும். | சேமிப்புக் கிடங்கு மேலாளரால் கையெழுத்திடப்பட்ட கொள்முதல் படிவத்தையும் தேவைப்பட்டால் இணைக்கலாம். |

# மாதிரிக் கொள்முதல் படிவம்




**கொள்முதல் ஆவணத்தில் இடம்பெற வேண்டிய விவரங்கள்**

- பொருட்களின் இயற்கை வேளாண் தரம்.
- பொருட்களின் அளவு.
- விவசாயியின் பெயர் மற்றும் குறியீட்டு எண்.
- விவசாயிக்கு வழங்கப்பட்ட ரசீது.
- வெவ்வேறு பொருட்கள் இருந்தால், பொருட்களின் பெயர்கள்.

# கொள்முதல் செய்யும்போது ஏற்படக்கூடிய தவறுகளை எப்படி தவிர்ப்பது ?

**கொள்முதல் திறமையான முறையில் நடைபெற, கீழ்க்காணும் விவரங்களைக் கொள்முதல் அலுவலர் அல்லது ஒப்பந்ததாரர் கருத்தில் கொள்ள வேண்டும்.**




- கொள்முதலைக் கையாளுவதற்குப் போதுமான பணியாட்களை நியமிக்க வேண்டும்.
- பொதுவாக, கொள்முதல் செய்யும்போது இரண்டு பணியாளர்கள் இருப்பது நல்லது; ஒருவர் பொருளின் தரத்தையும் அளவையும் சரிபார்ப்பார்; மற்றவர், விவரங்களைப் பதிவுசெய்து, கொள்முதலுக்கான தொகையை விவசாயிக்கு அளிப்பார்.
- கொள்முதல் செயல்பாடுகளை அகக் கட்டுப்பாட்டு முறைமையின் வேறொரு பணியாளர் மேற்பார்வையிட வேண்டும்.
- கொள்முதல் செய்யும் பணியாளர்கள் நன்றாகப் பயிற்சி பெற்றவர்களாகவும், தங்கள் பொறுப்புகளை நன்றாக உணர்ந்தவர்களாகவும் இருக்கிறார்களா என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.
- விளைபொருட்களைப் பற்றிய தகவல்களைப் பதிவுசெய்வதற்கும் அறிக்கையைத் தயாரிப்பதற்கும் வருடத்திற்கு ஒரு முறை அனைத்துப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டும்.



# விளைபொருட்களின் நடமாட்டம்


விளைபொருட்களின் நடமாட்டம் என்பது விளைபொருட்களைப் பக்குவப்படுத்துதல், கையாளுதல், சேமித்தல் போன்றவற்றைக் குறிக்கும்.




# விளைபொருட்களின் வரத்தைக் கண்காணிக்கும் பொறுப்பு யாருடையது?

பண்ணையிலிருந்து ஏற்றுமதிவரையிலான விளைபொருட்களின் வரத்தை அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவர் கண்காணிக்க வேண்டும்.

மாறாக, ஒரு கட்டத்தில் விளைபொருட்கள் பக்குவப்படுத்துபவருக்கோ, வியாபாரிக்கோ விற்பனை செய்யப்பட்டதும் அகக் கட்டுப்பாட்டு முறைமையைச் செயல்படுத்துபவரின் கடமை முடிந்துவிடலாம். இத்தகைய சமயங்களில் கையாளுதலின்போது எந்தவித தவறும் ஏற்படாமல் தடுக்க வியாபாரிக்கும், பக்குவப்படுத்துபவருக்கும் தனித்தனியாகச் சான்றளிக்க வேண்டும். இப்படி சான்றளிக்கும்போது ஒவ்வொருவரும் தரநிர்ணயங்களைக் கடைப்பிடிப்பதை உறுதிசெய்யும் வகையில் முறைமைகளை உருவாக்க வேண்டும்.



# விளைபொருட்களின் வரத்து எடுத்துக்காட்டு : மிளகு



# விளைபொருட்களின் வரத்தில் ஏற்படும் பிரச்சினைகள் எ:கா: மிளகு ( 1 )

விவசாயி விளைபொருட்களை அறுவடை செய்யும்போது → பண்ணையிலேயே காயவைக்கும்போது → சாக்குப் பைகளில் அடைத்துப் பண்ணையிலேயே சேமிக்கும் போது →

**விவசாயி விளைபொருட்களை அறுவடை செய்யும்போது**

- பொருளின் தரம் (எவ்வளவு முற்றியதாக இருக்கிறது).
- எறும்புகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தியிருக்கலாம்.
- பூச்சிகள், விலங்குகளைக் கட்டுப்படுத்துவதற்காகச் சில தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம்.
- ஊடுபயிர்களில் தடைசெய்யப்பட்ட ரசாயன இடுபொருட்களைப் பயன்படுத்தியிருக்கலாம்.
- விளைபொருட்களை அறுவடைசெய்ய / பறிக்க தூய்மையற்ற சாக்குப் பைகளைப் பயன்படுத்தியிருக்கலாம்.
- இயற்கை விளைபொருட்கள், தடுப்புப் பகுதியில் உள்ள பயிர்களின் விளைபொருட்களுடன் கலந்துவிடலாம்.

**பண்ணையிலேயே காயவைக்கும்போது**

- விளைபொருட்களைக் காயவைக்கும் களத்தில் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம்.
- விளைபொருட்களுக்குத் தூய்மைக் கேடு ஏற்பட்டிருக்கலாம்.
- விளைபொருட்களின் தரம் பாதிக்கப் பட்டிருக்கலாம்.
- பிற நிலங்களிலிருந்து பெறப்பட்ட விளை பொருட்களுடன் ஒன்றாகக் காயவைக்கும் போது கலப்படம் ஏற்பட்டிருக்கலாம்.
- விளைபொருட்களைச் சாலைகளில், ரசாயனங்களைத் தெளிக்கும் விவசாயியின் பண்ணைக்கு அருகில், மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளின் அருகேயே காய வைப்பதால், தூய்மைக் கேடு அடைந்திருக்கலாம்.
- விளைபொருட்களுடன் இதர பொருட்கள்

**சாக்குப் பைகளில் அடைத்துப் பண்ணையிலேயே சேமிக்கும் போது**

- விளைபொருட்களைச் சேமிப்பதற்குத் தூய்மையற்ற சாக்குப் பைகளைப் பயன்படுத்தியிருக்கலாம்.
- சாக்குப்பைகள் தவறான முகப்பு அட்டைகளைக் கொண்டிருக்கலாம்.
- சென்ற வருடத்தின் விளைபொருட்களுடன் பிற விளைபொருட்கள் கலந்துவிட்டிருக்கலாம்.
- விளைபொருட்களின் தரம் பாதிக்கப்பட்டிருக்கலாம்.
- சேமிப்பின்போது ஏற்பட்டிருக்கக்கூடிய பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

# விளைபொருட்களின் வரத்தில் ஏற்படும் பிரச்சினைகள் எ:கா: மிளகு ( 2 )

விவசாயிகளே விளைபொருட்களைக் கொள்முதல் மையத்திற்குக் கொண்டுசெல்லும்போது → கொள்முதல் செய்யும்போது → சாக்குப் பைகளில் அடைத்துப் பண்ணையிலேயே சேமிக்கும் போது →

**விவசாயிகளே விளைபொருட்களைக் கொள்முதல் மையத்திற்குக் கொண்டுசெல்லும்போது**

- சான்றளிக்கப்பட்ட விளை பொருட்களுடன் சான்றளிக்கப்படாத விளைபொருட்களைக் கலந்துவிடலாம்.
- ஒரே வாகனத்தில் சான்றளிக்கப் பட்ட விளைபொருட்களையும் சான்றளிக்கப்படாத விளை பொருட்களையும் கொண்டு செல்வதால் கலப்படம் ஏற்படலாம்.
- முறையான முகப்பு அட்டைகள் இணைக்கப்பட்ட சாக்குப் பைகள் கலப்படத்தைத் தவிர்க்கும்.
- விவசாயிகளே விளை பொருட்களைக் கொள்முதல் மையங்களுக்குக் கொண்டு செல்வதையோ, ஒரு விவசாயியே எல்லாருடைய விளை பொருட்களையும் கொண்டு செல்வதையோ தவிர்ப்பதால் கலப்படத்தைத் தடுக்க முடியுமா?

**கொள்முதல் செய்யும்போது**

- அளவிடுவதில் தவறுகள்; தகவல்களைக் குறிப்பதில் தவறுகள்.
- பதிவு செய்துகொள்ளாத / ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட விவசாயிகளின் விளைபொருட்கள் விற்பனை செய்யப்படுதல்
- விவசாயி வேளாண்மை முறைகளைச் சரியாகப் பின்பற்றியுள்ளாரா, ஏதேனும் தவறுகள் செய்துள்ளாரா, அவர் மீது ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா போன்ற விவரங்கள் கொள்முதல் அலுவலருக்குத் தெரியப்படுத்தப்படாமல் இருக்கலாம்.
- விளைபொருட்களில் கலப்படம் நேர்தல்
- கொள்முதல் அலுவலரே மோசடி செய்யலாம். இதைத் தடுக்க :

– நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட இரண்டு நபர்களைக் கொள்முதலில் ஈடுபடுத்தலாம்.

– கொள்முதல் செய்வதற்கு முறையான செயல்முறைகளை வகுக்க வேண்டும்.

– கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் முகப்பு அட்டைகளைக் கொண்டிருக்க

**சாக்குப் பைகளில் அடைத்துப் பண்ணையிலேயே சேமிக்கும் போது**

- மற்ற விளைபொருட்களைக் கொண்டுசென்ற வாகனத்தில் இயற்கைவழி வேளாண் பொருட்களைக் கொண்டு செல்வதால் விளைபொருள் தரம் கெடலாம்.
- சேமிப்புக் கிடங்குக்குக் கொண்டு செல்லும்போது இணைக்கப்பட வேண்டிய விவரப் படிவங்கள் இல்லாமல் இருக்கலாம்.
- ரசாயன விளைபொருட்கள் உள்ள சாக்குப் பைகளுடன் இயற்கை விளைபொருட்கள் உள்ள சாக்குப் பைகள் கலந்துவிடலாம்.
- விளைபொருட்கள் உள்ள சாக்குப் பைகளில் உரிய முகப்பு அட்டைகள் இல்லாமல் இருக்கலாம்.
- விளைபொருட்கள் தவறான சேமிப்புக் கிடங்கில் ஒப்படைக்கப்படலாம்.

# விளைபொருட்களின் வரத்தில் ஏற்படும் பிரச்சினைகள் எ:கா: மிளகு ( 3 )

**சேமிப்புக் கிடங்குகளில் சேமிக்கும்போது**

- சொந்த இடமா? வாடகை இடமா?
- விளைபொருட்களில் கலப்படம் ஏற்படலாம்.
- பதிவேடுகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கலாம்.
- முகப்பு அட்டைகள் இணைக்கப்படாமல் இருக்கலாம்.
- பூச்சிக்கட்டுப்பாட்டிற்காகப் புகைமூட்டம் போட்டிருக்கலாம்.
- விளைபொருட்களைச் சேமித்துப் பாதுகாக்க வேறு ஏதேனும் வழிமுறைகளைப் பின்பற்றியிருக்கலாம்?
- தூய்மையற்ற சேமிப்புக் கிடங்குகளில் விளைபொருட்களைச் சேமித்துவைப்பதால் கலப்படம் ஏற்படலாம்.
- வைப்புப் பதிவேடுகள் முறையாகப் பராமரிக்கப்படாமல் இருக்கலாம்.
- தகவல்கள் சரியான முறையில் தொகுக்கப்படாமலிருக்கலாம்.
- சேமிப்புக் கிடங்கில் இயற்கைவழி விளைபொருட்கள் என்று குறிக்கப்படாமலிருக்கலாம்.
- விளைபொருட்களைத் தரையில் வைக்காமல் உயரமான இடத்தில் அடுக்கிவைக்க வசதிகள் இல்லாமல் இருக்கலாம்.

**விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும்போது**

- சொந்த இடமாகவோ அல்லது வாடகை இடமாகவோ இருக்கலாம்.
- விளைபொருட்களுடன் ஏதேனும் பகுதிப்பொருட்கள் சேர்க்கப்பட்டிருக்கலாம்.
- இயந்திரங்களால் ஏதேனும் கலப்படம் ஏற்படலாம்.
- வெவ்வேறு தொகுதிகளில் இருக்கும் விளைபொருட்களுடன் கலந்துவிடலாம்
- விளைபொருட்களைச் சாக்குப் பைகளில் அடைக்கப் பயன்படும் மை, கோந்து போன்ற பொருட்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் இருக்கலாம்.
- ஆலைகளுக்கு வரும் விளைபொருட்கள் அனைத்தும் சான்றளிக்கப்பட்டவையாக இல்லாமல் இருக்கலாம்.
- ஆலைக்குக் கொண்டுவரப்படும் எல்லா பொருட்களும் சரியான முறையில் பரிசோதிக்கப்படாமல் இருக்கலாம்.
- ஆலைகள் சுத்தமாகப் பராமரிக்கப்படாமல் இருக்கலாம்.


**ஏற்றுமதி**

ஏற்றுமதி ஆவணங்களில் தவறுகள். அவற்றில் இயற்கைவழி விளைபொருட்கள் என்று குறிக்கப்படாமலும் இருக்கலாம்.
விளைபொருட்கள் எந்த இடத்தில் சரக்குப் பெட்டகங்களில் வைக்கப்படுகின்றன?
துறைமுகத்திலுள்ள சேமிப்புக் கிடங்கில் பொருட்களை வைக்கும் போது ஏதேனும் கலப்படம் ஏற்படலாம்.
அக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் இல்லாமல் இருக்கலாம்.
ஏற்றுமதியாளர்களில் மாற்றம் இருக்கலாம், அதைப் பற்றி சான்று அளிப்பவருக்குத் தெரிவிக்கப்படாமல் இருக்கலாம்.

# விளைபொருட்களைக் கையாளுவதற்கான குறைந்தபட்சத் தேவைகள் : 1

**சேமித்தல், பக்குவப்படுத்துதல், கையாளுதல் போன்ற எல்லா நிலைகளிலும் இயற்கை விளைபொருட்கள் இனம் காணப்படக்கூடியதாக இருக்க வேண்டும்.**
**(எ. கா.)**

- இயற்கைவழி விளைபொருட்களுக்கென்று ஒரு தனித்த அடையாளம் கொண்ட சரக்குப் பெட்டகங்கள், இயற்கை வேளாண் விளைபொருட்கள் என்று குறிப்பிடப்பட்ட முகப்பு அட்டைகளைக் கொண்ட சாக்குகள்.
- பக்குவப்படுத்தப்பட்ட பொருட்களுக்குத் தனி அடையாளம் கொண்ட சாக்குப் பைகள் (முகப்பு அட்டைகளில் பொருட்களைப் பற்றிய மிகச் சுருக்கமான விவரம் போதும்) .
- விளைபொருட்களைப் பற்றிய ஆவணங்களிலும், போக்குவரத்துப் படிவங்களிலும், இயற்கைவழி வேளாண் விளைபொருட்கள் என்று குறிப்பிட வேண்டும்.





# விளைபொருட்களைக் கையாளுவதற்கான குறைந்தபட்சத் தேவைகள் : 1

**இயற்கைவழி விளைபொருட்களையும் ரசாயன விளைபொருட்களையும் தனித்தனி இடங்களில் கையாள வேண்டும்.**

- இயற்கைவழி வேளாண் பொருட்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதி.
- போக்குவரத்துப் பகுதிகளில் இயற்கைவழி வேளாண் விளைபொருட்கள் பகுதி என்ற அம்புக் குறியீட்டைப் பயன்படுத்த வேண்டும்.
- சேமிப்புப் பகுதிகளில் இயற்கைவழி வேளாண் விளைபொருட்கள் மட்டும் என்று குறிப்பிட வேண்டும்.
- இயற்கைவழி வேளாண் விளைபொருட்களைக் கையாளுவதற்குத் தனி இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும்.
- இயற்கைவழி வேளாண் விளைபொருட்களை அவற்றுக்கென்று குறிப்பிடப்பட்ட வாகனத்தில்தான் கொண்டுசெல்ல வேண்டும்.
- ஒரே இயந்திரத்தையும், ஒரே கையாளும் பகுதியையும் பயன்படுத்தினாலும் விளைபொருட்கள் கலந்துவிடாமலிருக்க வழிசெய்ய வேண்டும்.





# விளைபொருட்களைக் கையாளுவதற்கான குறைந்தபட்சத் தேவைகள் : 2


**விளைபொருட்களைப் பக்குவப்படுத்துவதற்கும், சேமிப்பு மற்றும் பக்குவப்படுத்தும் பகுதிகளில் புகைமூட்டம் போடுவதற்கும் தடைசெய்யப்பட்ட முறைகளைப் பின்பற்றக் கூடாது.**

- விளைபொருட்கள் உள்ள சரக்குப் பெட்டகங்கள் அல்லது சேமிப்புக் கிடங்குகளுக்குத் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு புகைமூட்டம் போடக்கூடாது.
- விளைபொருட்களைக் கதிர்வீச்சுக்கு உட்படுத்தக் கூடாது.
- இடுபொருட்கள் தரநிர்ணயங்களின்படி பயன்படுத்தப்பட்டுள்ளன என்று உறுதியளிக்க வேண்டும்.
- தரநிர்ணயங்களைப் பின்பற்றுவதில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு ஏற்ற வழிமுறைகளை வகுக்க வேண்டும்.

**சேமிப்புப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பூச்சிக்கட்டுப்பாட்டு முறைகள் தரநிர்ணயங்களின்படி இருக்க வேண்டும்.**

- பூச்சிகளைக் கட்டுபடுத்துவதற்கான நிர்ணயிக்கப்பட்ட முறைகளையும், அவற்றைப் பற்றிய ஆவணங்களையும் தயாரிக்க வேண்டும்.
- விளைபொருட்களைப் பாதிக்கக்கூடிய பூச்சிகளை இனங்கண்டு, அவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை மதிப்பீடு செய்து, தகுந்த நடவடிக்கைகளை இயற்கை முறையில் மேற்கொள்ள வேண்டும்.

# இயற்கைவழி வேளாண் விளைபொருட்களின் சேமிப்பு



# விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும் வழிமுறைகள் 1

**அறுவடைக்குப் பின்**
**விளைபொருட்களைப்**
**பண்ணைகளில் நேர்த்திசெய்தல்**

- விளைபொருட்களைக் காயவைத்தல்
- உரித்து / ஓடுகளை நீக்குதல்
- விளைபொருட்களைத் துண்டுபோடுதல்
- விதைகளைச் சுற்றியுள்ள சதைப் பகுதிகளை அகற்றுதல் (எ.கா: காபி)



விளைபொருட்களை உலர்த்துதல்



விதைகளைச் சுற்றியுள்ள தோலை அகற்றுதல்



தரம் பிரித்தல்



விளைபொருட்களைப் பக்குவப்படுத்துதல்

# விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும் வழிமுறைகள் 2

**விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும் மையப் பகுதி / ஒப்பந்த முறையில்**
**பக்குவப்படுத்துபவர்**

- விளைபொருட்களைக் கழுவுதல் / காயவைத்தல்
- விளைபொருட்களைப் பிரித்தெடுத்தல் / தரம் வாரியாக வகைப்படுத்துதல்
- தேவையான பிற பகுதிப் பொருட்களை விளைபொருட்களுடன் ஒன்றாகக் கலக்குதல்
- அரைத்தல் / துண்டுகளாக்குதல்
- மேல்தோலை அகற்றுதல். (எ. கா: காபியை உலர் முறையில் பதப்படுத்துதல்.)
- விளைபொருட்களை இதர பொருட்களுடன் கலந்து பக்குவப்படுத்துதல் எ. கா: வாழைப்பழத் துண்டுகளை எண்ணெயில் வறுத்தல்.
- விளைபொருட்களை உரிய பைகளில் (அ) பெட்டிகளில் அடைத்தல்



விளைபொருட்களைக் காய வைத்தல்



விளைபொருட்களைச் சுத்தம் செய்தல்



பக்குவப்படுத்தப்பட்ட விளைபொருட்களைப் பைகளில் அடைத்தல்


# இயற்கை முறையில் விளைபொருட்களைப் பக்குவப்படுத்துவதற்கான முக்கியத் தேவைகள்





**இயற்கைவழி விளைபொருட்களைத் தனித்தனியாகப் பிரித்து அடையாளமிடுதல்**

- பக்குவப்படுத்தும்போது இயற்கைவழி விளைபொருட்களைப் பிரித்து உரிய அடையாளமிடுதல்.
- இயற்கைவழி விளைபொருட்களைத் தனியாகச் சேமித்தல், இடமாற்றத்தின்போது அதற்கென்று தனிபட்ட வாகனத்தைப் பயன்படுத்துதல்.
- பக்குவப்படுத்தும்போது எல்லாக் கட்டங்களிலும், இவை இயற்கைவழி விளைபொருட்கள் என்று குறிப்பிட வேண்டும்.
- விளைபொருட்களின் ஒவ்வொரு கொள்முதல் தொகுதிக்கும் ஒரு குறிப்பிட்ட எண்ணைக் கொடுக்க வேண்டும்.



**இயற்கை பகுதிப்பொருட்கள் மற்றும் பக்குவப்படுத்தும் முறைகள்**

- இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பகுதிப் பொருட்களை மட்டுமே விளைபொருட்களுடன் சேர்க்க வேண்டும்.
- தரநிர்ணயங்களில் அனுமதிக்கப்பட்ட முறைகளை மட்டுமே பக்குவப்படுத்துவதற்குப் பயன்படுத்த வேண்டும்.



## பராமரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

- விளைபொருட்களைப் பக்குவப்படுத்துவது தொடர்பான ஆவணங்கள்.
- சேமிப்புக் கிடங்குப் பற்றிய ஆவணங்கள்.
- மூலப்பொருட்கள் பற்றிய ஆவணங்கள்

# பக்குவப்படுத்தும்போது இயற்கைவழி விளைபொருட்கள் பிறவற்றுடன் கலந்துவிடாமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

**இயற்கைவழி விளைபொருட்களை மட்டுமே கையாள வேண்டும்.**

- தனிப்பட்ட உற்பத்தி நிலைமைகள் எ.கா : பக்குவப்படுத்துவதற்குப் பயன்படும் கருவிகள்
- இயற்கைவழி விளைபொருட்களை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பக்குவப்படுத்துதல்

  எ.கா: எல்லாக் கருவிகளும் / இயந்திரங்களும் தூய்மையாக இருக்கும்போது, ஒவ்வொரு திங்கட்கிழமை காலையில் மட்டும் இயற்கைவழி வேளாண் விளைபொருட்களைப் பக்குவப்படுத்துவது என்ற ஏற்பாடு. பக்குவப்படுத்துவதைக் கொள்முதல் தொகுதிகளின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

# பக்குவப்படுத்தும்போது இயற்கைவழி விளைபொருட்கள் பிறவற்றுடன் கலந்துவிடாமலிருக்க என்ன செய்ய வேண்டும்?

- நன்கு பயிற்சி பெற்ற பணியாளர்களை மட்டுமே விளைபொருட்களைப் பக்குவப்படுத்துவதில் ஈடுபடுத்த வேண்டும்.
- இயற்கைவழி விளைபொருட்களைப் பக்குவப்படுத்தும்போது தொடர்ந்த கவனிப்பு வேண்டும்.



# இயற்கைவழி விளைபொருட்களை ஏற்றுமதி செய்யும்போது முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை

- இயற்கைவழி விளைபொருட்கள், ரசாயன விளைபொருட்களுடன் கலந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

- இயற்கைவழி விளைபொருட்களில் எந்தவிதக் கலப்படமும் நிகழக்கூடாது.




- இயற்கைவழி விளைபொருட்களைப் பற்றிய விவரங்களை ஆவணப்படுத்த வேண்டும்.

- இயற்கைவழி விளைபொருட்கள் அடங்கிய சாக்குப் பைகள் முறையான முகப்பு அட்டைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

# இயற்கைவழி வேளாண் விளைபொருட்களை ஐரோப்பிய யூனியனில் ஏற்றுமதி செய்வதற்கான தேவைகள்

**ஆய்வுச் சான்றிதழை ஒவ்வொரு முறை சரக்குகளை அனுப்பும்போதும் அத்துடன் இணைக்க வேண்டும்.**

இயற்கைவழி வேளாண் விளைபொருட்களை இறக்குமதி செய்து ஐரோப்பாவில் விற்பனை செய்வதற்குத் தேவையான ஆய்வுச் சான்றிதழ்.


Article 11 (1) or Article 11(6)
Tanzania
Germany
Logistik & Handel GmbH

**இறக்குமதி செய்வதற்கான அங்கீகாரங்கள் (ஜெர்மனிய அங்கீகார சான்றிதழ்)**


Der Senator für Wirtschaft und Häfen
Freie Hansestadt Bremen
Bescheid:

# இயற்கைவழி வேளாண்மைச் சான்று பெறுவதற்கான வழிமுறைகள்


## சான்றளிப்பவரைத் தேர்ந்தெடுத்தல்

- வியாபாரத்திற்கான தேவைகள் மற்றும் சான்று அளிப்பதற்கான தர நிர்ணயங்களைக் கொண்ட நிறுவனமாகவும்
- தரநிர்ணயங்களைச் சரிபார்த்து சான்றளிப்பதற்கான அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகவும்




- EN45011 / ISO 65 மற்றும் / அல்லது IFOAM நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும்
- முன்னிலையிலுள்ள நிறுவனமாகவும், தரமான முறையில் பணியாற்றுவதாகவும்
- நல்ல மதிப்புடைய மற்றும் கொள்முதல் செய்பவர்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நிறுவனமாகவும்
- மற்ற சான்றளிப்பவர்களுடன் ஒப்பிடும் போது, விளைபொருட்களுக்கு நல்ல விலையைப் பெற்றுத் தரக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

# இயற்கைவழி வேளாண்மைச் சான்று பெறுவதற்கான வழிமுறைகள்




## விண்ணப்பிப்பதற்கான செயல்முறைகள்

- நம்முடைய இயற்கைவழி வேளாண்மைத் திட்டத்தைப் பற்றிய விவரங்களை அனுப்ப வேண்டும்.
- சான்று பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் செலவு பற்றிய விவரங்களைப் பெற்று கொள்ள வேண்டும்.
- பின்பு விண்ணப்ப ஆவணங்களைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
- பின்பு ஒப்பந்தத்தை ஏற்று அதில் கையெழுத்திட வேண்டும்.
- அக ஆய்வு முடிந்தப்பின் (சுமார் 80%) முதல் புற ஆய்விற்கான தேதியை ஒப்புக்கொண்டு தெரிவிக்க வேண்டும்.

# புற ஆய்வின் நோக்கம்




அகக் கட்டுப்பாட்டு முறைமை கையேட்டை மதிப்பீடுசெய்தும் அகக் கட்டுப்பாட்டு அலுவலகத்திலுள்ள கோப்புகளைப் பார்த்தும், ஆய்வறிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தும், பணியாளர்களுடன் கலந்து பேசியும், விவசாயிகளின் பட்டியலைப் பார்த்தும், எதிர்கொள்ளவிருக்கும் பிரச்சினைகளைப் பற்றிய ஆய்வாளரின் அறிக்கையைப் பார்த்தும் இவற்றை தெரிந்துகொள்ளலாம்.


இயற்கைவழி வேளாண்மை முழுமையான முறையில் அகக் கட்டுப்பாட்டு முறைமையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதைப் புற ஆய்வு உறுதிசெய்யும்.

# விவசாயிகளின் வயல்களை மறு ஆய்வு செய்தல்

வயல்களை ஆய்வுசெய்தல்

சேமிப்புக் கிடங்குகளை ஆய்வுசெய்தல்





விவசாயியைச் சந்தித்துப் பேசுதல்

ஆவணங்களைப் பரிசோதித்தல்

அக ஆய்வறிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்து முடிவுகளை உறுதிசெய்தல்

# இயற்கைவழி வேளாண்மைச் சான்றிதழ்

## மேற்கொள்ள வேண்டிய சீரமைப்பு நடவடிக்கைகள்

- மண் அரிப்பைத் தடுத்து மண்வளத்தை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும்.
- ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவரும் சாகுபடி முறைகளில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமென்றால் அதை விவசாயிக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஆய்வாளர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்சி தேவை.
- விவசாயிகளுக்கு உரிய ரசீதுகளை வழங்க வேண்டும்.
- வரைபடங்களைத் தற்போது உள்ளதைவிடச் சிறந்த முறையில் தயாரிக்க வேண்டும்.

இயற்கைவழி வேளாண்மை தரச்சான்றிதழ் குறித்து பயிற்சியும் ஆலோசனையும் பெற விரும்புபவர்கள் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தை தொடர்பு கொள்ளலாம்.


**இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்**

எண். 30, காந்திமண்டபம் சாலை

கோட்டூர்புரம், சென்னை - 600 085

தொலைபேசி : 044-2447 1087 / 2447 5862

மின் அஞ்சல் : info@ciks.org / ciksorg@gmail.com

இணையதளம் : www.ciks.org

CIKS

people unlimited

Hivos

இந்தப் பயிற்சி வழிகாட்டியை தயாரிக்க
நிதி உதவி அளித்த ஹீவாஸ் நிறுவனத்திற்கு
எங்கள் மனமுவந்த நன்றி!